# தென்மொழி

## உறுதியும் நன்றியும்!

எவரெனைத் தடுக்கினும் எவரெனைக் கெடுக்கினும்
என்கை வீசி நடையிடுவேன்!—ஒரு
சுவர்எனைத் தாங்கினும், துரும்பு, கை கொடுக்கினும்
செந்தமிழ் மாலைகள் அவைக்கிடுவேன்!

மலையே குலுங்கினும், வானே இடியினும்
மனங்குலை யாமல் மேல்நடப்பேன்!—துயர்
அலைகளுக் கிடையோர் கட்டையே உதவினும்
அதன்திறம் நினைந்து புகழ் கொடுப்பேன்!

கடுஞ்சொல் வீசினும், கணைகளைத் தொடுக்கினும்
கடமையில் துவளேன்; வினைமுடிப்பேன்!—நான்
படுந்துயர்க் கிரங்கிக் கைகொடுப் போர்க்குப்
பைந்தமிழ் மாளிகை கட்டிடுவேன்!

எனைவெறுத் தாலும், எனைச்சிதைத் தாலும்
ஏற்றுள கொள்கைக் குயிர்தருவேன்!—ஒரு
தினையள வேனும் துணைவரு வோரைத்
தீந்தமி ழால்நிலை நிறுத்திடுவேன்!



சுவடி: 12.
ஓலை : 4.

ஆசிரியர்
பெருஞ்சித்திரன்

விலை : ஓர்
உருபா.

# நமக்கு வந்த மடல்கள்

**0 : 429 :** உயர்திரு ஐயா பெருஞ்சித்திரனார் அவர்கட்கு. நான், 9 எண்ணுள்ள வழிப் பேருந்தில் நடத்துநராகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் பொழுது, தங்களின் அன்பரில் ஒருவர் என் கையில் "தென்மொழி"யைக் கொடுத்து விட்டுச் சென்றார். கொடுத்தவுடனே அந்த அன்பரைக் காணவில்லை. என் மடியில் கிடந்த அம் மாணிக்கத்தை (இதழை)க் கருமமே கண்ணாகப் பணியாற்றிக் கொண்டும் படித்துக் கொண்டும் சென்றேன். அவ்விதழினுள் இருந்த சுவையினை என்னால் அள்ளிப் பருக முடியவில்லை. அச் சுவையின் வண்ணனைக்கு அளவே கிடையா. இவ் விளக்கங்களைப் பார்த்துப் படிக்கும் பொழுது தமிழினத்தின் முன்னணியின் "அஞ்சா நெஞ்சம் படைத்த வீரர்" என்ற பெயர் தங்களுக்கே உரியதாகும் என எண்ணினேன். கரணியம் தூயதமிழிலேயே இவ்விதழைத் தமிழர்களுக்குத் தமிழை அமிழ்தமாகப் பருகுவதற்கும் தமிழின் உணர்வை விளக்கமாகவும், தெளிவாகவும் விளங்கும்படியாகவும், கருத்துச் செறிவாகவும், சுருக்கமாகவும் படைத்துள்ளீர்கள்.

இவ்விதழினைக் கண்டதிலிருந்து தமிழ் உணர்வொடும், தமிழை வளர்க்கும் வகையிலும் எழுதுகின்ற உங்கள் உளப்படைப்பிற்கு உள மகிழ்ந்து தங்களுக்கு என்னால் இயன்ற உதவி செய்யக் காத்திருக்கிறேன். —வெ. முருகேசன், சென்னை-26.

**0 : 430 :** வணக்கம் பல. நான் பங்கேற்றதும், முழுமையாக உணர்ந்து இந்தியை எதிர்த்துப் போராடியதும் 1965-ஆம் ஆண்டில் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டந்தான். அன்று நடந்த போராட்டத்தைப் படையின் உதவியால் நிறுத்தி வைத்து விட்டதாக நடுவணரசு நினைத்தாலும் 'இல்லை' என்னும்படி சிலரின் நெஞ்சில் இன்னும் நீறுபூத்த நெருப்பாகக் கனன்று கொண்டிருப்பதைக் காண்கின்றோம். ஆனால் அந்தப் போராட்டத்திற்கு நேர்மாறாக இன்று தமிழகம் போய்க் கொண்டிருக்கின்றது.

எங்கெங்குக் கேட்பினும் நம் காதில் நுழைவது இந்தி! பார்க்குமிடமெல்லாம் இந்தித் திரைப்படங்கள்தாம் தென்படுகின்றன. அவைதாம் இன்று பிறந்தகத்தில் இல்லாதபடி நூறு நாட்கள், ஓர் ஆண்டு என்று ஓடுகின்றன. மொழி தெரியாமல் ஒரு திரைப்படத்தை முழுமையாக எவ்வாறு சுவைக்க முடியும் என்பதுதான் நமக்கு விளங்கவில்லை? இந் நிலையில் 'கல்லக்குடி கொண்ட' தமிழகத்தின் தன்மானத் தமிழர் என்ன செய்து கொண்டிருக்கின்றார்? இவ்வாறான வணிகத்திற்கு ஒப்புதல் அளித்தவர் யார்?

இப்பொழுதெல்லாம் சனவரி 26-ஆம் நாளை இந்தி எதிர்ப்பில் உயிர் நீத்தவர்கள் நினைவாகக் கொண்டாடுவதில்லை. ஏன் மறந்து விட்டார்கள்? தீக்குளித்தவர்கள் நோக்கம் என்ன ஆவது? குண்டடி பட்டு உயிர் துறந்தவர்கள் எண்ணம் எங்கே ஒதுங்குவது? கண்ணிழந்து காலிழந்து தவித்த அன்பர்களின் உள்ளங்கள் பொங்கி எழாதா? அட மானங்கெட்ட தமிழகமே! நீ ஒரே மூச்சாக அழிந்து போனால் கவலையில்லை. எங்களைப் போன்றவர்களின்

(தொடர்ச்சி 3-ஆம் அட்டைப் பக்கம் பார்க்க)

இம்மாதச் சிறப்பு மடல்:

# இந்தியெதிர்ப்பு என்னுயிற்று?

**0: 436:** அன்பு ஐயா! வணக்கம். 'தென்மொழி' சென்னைக்கு வந்துள்ளமையை அறிந்தேன். பல ஆண்டுகளுக்குமுன், நான் சென்னையைக்கண்ட பொழுது, அஃது ஒரு சரியான 'குப்பைமேடு' என்பதைக் கண்டேன். அது தமிழ் நாட்டிற்கு எவ்வகையில் தலை நகராய் இருக்கத் தகுதி வாய்ந்தது—தமிழ் மக்களின் நாகரிகத்தை பண்பாட்டை-மொழிச் சிறப்பை எவ்வகையில் படம் பிடித்து காட்டு கிறது என்பதை என்னுல் விளங்கி கொள்ளவே இயலவில்லை. சென்னையை எத்துறையிலும், எவ்வகையிலும், எவராலும் துப்புரவு செய்து விடவே இயலாது. இந்நிலையில் புற்றீசலகள் போல் புறப்பட்டு வரும் பிராமண ஏடுகளுக் கிடையில் தமிழின் தூய்மையைத் தாங்கள் நிலைநாட்ட முனைந்திருப்பதை என்னுல் எண்ணிப் பார்க்கவே இயலவில்லை. இம் முனைப்புத் தனித்தமிழ் இயக்கத்தின் தொடக்கம் அல்லது முடக்கமாக அமையும் என்று நம்புகிறேன். தமிழ் மக்களின் தலையெழுத்தை எழுத எப்படித் தில்லி ஏற்ற இடமில்லையோ, அப்படியே தமிழ் வரலாற்றை எழுதச் சென்னையும் ஏற்ற இடமில்லை.

சென்னைக் கோட்டையைப் பிடித்து விட்டால், வட நாட்டையே பூட்டி விடலாம் என்றுதான் தி.மு.க.வினர் நினைத்தனர். ஆனுல் எந்த மாணவர் படையை 'இந்தி ஒழிக' என்று தில்லிக்கு எட்டுமாறு முழங்க வைத்துச் சென்னைக் கோட்டையைப் பிடித்தனரோ, அதே மாணவர் கூட்டத்திற்கு வயிற்றைக் கழுவ, தொழில் தேடிப் பிழைக்க வந்த வடநாட்டில், இந்தியைத் 'தேசியமொழி' என்ற பெயரால் இந்திமொழி வெறியர்களால், கற்பிக்கப்படுகிறது. பத்தாண்டுகளுக்கு முன தமிழ்ப்பற்றுல் (!) இந்தியை எதிர்த்த அதே மாணவர் படை, தொழில் வாய்ப்பிற்கும், பதவி ஏற்றத்திற்கும், இன்று அடங்கி ஒடுங்கி, கைகட்டி, வாய்பொத்திக் கொண்டு இந்தியைக் கற்கின்றனர். நம் தமிழ்ப் பேசும் வாய்க்கு (இந்தியால்) பூட்டுப்போட்டு, வயிற்றை அடகு வைத்து, நம் கூட்டு மொத்தமான இன, மொழி வாழ்க்கையையே இந்தி வெறியர்களுக்கு விற்று விட்டோமா என்ன? இந்தியை எதிர்த்தே தமிழக ஆட்சிக்கு வந்தவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிருர்கள்? இந்தி எங்கெல்லாம் எப்படி எப்படியெல்லாம் நுழைக்கப்பட்டு வருகின்றது என்பதையும், இந்தி அறியாமக்கள் எந்த அளவில் தாக்கப்பட்டுத் தாழ்த்தப் படுகிருர்கள் என்பதையும் அவர்கள் அறியார்களா, என்ன? நாம் இரண்டாந்தர (குடிமக்கள் அல்ல) அடிமை மக்களாக்கப்பட்டு வருகிரோம் என்பதை எவராவது மறுக்க இயலுமா? வடநாட்டு நடுவணரசில் (Central Govt) பணிபுரியும் தமிழர்கள் எவ்வகையில் இந்தியின் வல்லாண்மையிலிருந்து விடுபட்டு ஒதுங்கி இருக்க முடிகிறது?

(தொடச்சி 8-ஆம் பக்கம் பார்க்க).

" கெஞ்சுவதில்லை பிறர்பால்!
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை " எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர்நின்றே!




# தென்மொழி

இலக்கிய இதழ்

[நிறுவனம் தி. பி: 1990 (1959)]

**சுவடி: 12, ஓலை: 4.**

சுறவம்.-தி. பி. ௨௦௦௬-(சன.-'75-பிப்.-'1975.).

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-5. தமிழகம்.


## நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

# இலங்கைத் தமிழர்க்கு என் கண்ணீர்!

இலங்கையில் தமிழ மக்கள்
எத்தனை யோ, நூற் றாண்டாய்
விலங்குக ளோடும், தீய்க்கும்
வெயிலொடும் குளிரினோடும்
கலங்கிய கண்ணீ ரோடும்
கடுமையாய் உழைத்து ழைத்துப்

புலங்களைத் திருத்தி னார்கள்!
புதுப்புலம் விளைவித் தார்கள்! 1.

காடுகள் அழித்து, நல்ல
கழனிகள் தோற்று வித்தார்!
மேடுகள் குழிகள் எல்லாம்
சமநிலை மேவச் செய்தார்!
மாடுகள் போலு ழைத்தும்,
மண்வளம் பெருக்கி வாழ்ந்தும்,
நாடுகள் அற்ற— வாழ்க்கை
நலமற்ற— குடிக ளானார்! 2.

நினைக்கையில் உயிரும் நெஞ்சும்
நெருப்பாகிக் கனலும்! நல்ல
பணைக்கீடாய் உழைப்பைத் தந்தார்;
பயன்தினை யின்றிப் போனார்!
விளைக்கவர் உரியர் என்றால்,
விளைவுக்கும் உரியர்; ஆனால்,
மனைக்கொரு நிலமும் இன்றி
அடிமையாய் மாள்கின் றாரே! 3.

கல்விக்கங் குரிமை யில்லை;
சிங்களம் கற்றல் வேண்டும்!
செல்வத்தைச் செய்வா ரேனும்
செழிப்புள்ள வாழ்க்கை யில்லை!
பல்வளம் பெருக்கு கின்ற
பாட்டாளி மக்க ளேனும்
நல்வள வாய்ப்பு மின்றி,
நலிவோடு வாழ்த லுற்றார்! 4.

தேயிலைத் தோட்டத் துள்ளே
தேட்டங்கள் செய்வ தெல்லாம்—
நோயினில், கொடுமை தன்னில்
நொந்துடல் மெலிவ தெல்லாம்—
நாயினும் இழிவாய் வாழும்
நந்தமிழ்க் கூட்ட மே, ஆம்!
வாயிலாப் புழுவாய் அங்கே
வதைபட்டுச் சாகின் றார்கள்! 5.

கொய்வது குளம்பிக் கொட்டை[1]
குடிப்பது பச்சைத் தண்ணீர்!

நொய்வப்பால்[2] எடுப்ப தெல்லாம்
நொடிகின்ற தமிழர் கூட்டம்!
உய்வதும் நாட்டை யாளும்
உரிமையும் சிங்க ளர்க்கே!
செய்வதங் கின்ன தென்று
தெரியாமல் திகைக்கின் றார்கள்! 6.

இமிழ்கடல் வரைப்பில் தோன்றி
இவ்வுல கெல்லாம் ஆண்ட
தமிழ்மொழி அடிமை மக்கள்
தாய்மொழி யாகும், அங்கே!
தமிழ்மொழிக் கல்விக் கங்குத்
தனியிடம் அளிப்ப தில்லை;
உமிழ்தரு சிங்க ளத்தில்
உரையாற்றல் சட்டம், அங்கே! 7.

பாண்டியன் மரபில் தோன்றி
உலகெலாம் பரந்து வாழும்
மாண்டிறல் தமிழ ரைத்தாம்
மரமேறும் கூலி என்பார்!
வேண்டிய தெல்லாம் நன்கு
விளைவித்துக் கொடுத்த கூட்டம்
கூண்டிலே அடைக்கப் பெற்ற
அரிமாப்போல் குறுகிற் றங்கே! 8.

பதவியோ தமிழர்க் கில்லை;
படையினில் சேர்ப்ப தில்லை;
முதலிட்டு வணிகஞ் செய்யும்
முதலாளிப் பேறங் கில்லை!
கதவுக்குத் தாழ்ப்பாள் போல—
களைக்கொத்துக் காம்பைப் போல—
உதவிடும் தமிழர்க் கங்கே
உண்மைப்பேர் கள்ளத் தோணி. 9.

காடுற்ற உழைப்பால் நீண்ட
களைப்புற்ற தமிழர்க் கங்கே—
வீடற்ற தெருநாய் வாழ்க்கை!
விடிவற்ற இருண்ட காட்சி!

---

1. குளம்பிக் கொட்டை—காப்பிக் கொட்டை.
2. நொய்வப்பால்—'இரப்பர்' மரப்பால்.

நாடற்றும் உரிமை யற்றும்
    நலமற்றும் பதவி யற்றும்
கேடுற்ற தமிழர் அங்கே
    கிளையற்று வாழ்தல் கேளீர்! 10.

தமிழினம் உலகை யாண்ட
    தனியினம் என்றே நாமும்
அமிழ்தெனப் பேசிப் பேசி
    ஆண்டாண்டா யடிமை யானோம்!
உமிழ்கின்ற எச்சில் சோற்றுக்
    கோடிடும் நாய்க ளைப்போல்
தமிழினம் தமிழர் நாட்டில்
    வாழ்தலைத் தவிர்ப்பார் இல்லை! 11.

என்னினும் இலங்கை நாட்டில்
    என்னினம் வாழ்தல் கேட்டால்
மின்னென்று தலையிற் பாய்ந்து
    மேனியைத் தீய்த்தாற் போல
இன்னுயிர் நடுக்கங் கொல்லும்!
    என்செய்வார் இங்கே உள்ளார்?
தன்னினும் கேடுற்றோர் யார்
    என்றிந்தத் தமிழன் கேட்பான்? 12.

தமிழர்க்குத் தமிழர் நாட்டில்
    தனியர சுரிமை இல்லை;
தமிழர்க்கிங் குடம்புக் கூட்டில்
    தமிழுயிர் ஓடல் இல்லை;
தமிழரின் குருதி யோட்டம்
    தனித்தமிழ் ஓட்டம் இல்லை;
தமிழரைத் தமிழர் நாட்டில்
    தமிழனே மதிப்ப தில்லை! 13.

அடிமைக்கோ ரடிமை தன்னால்
    ஆகிடப் போவ தென்ன?
மிடிமைக்கு மிடிமை யாங்ஙன்
    மேல்துணை வருதல் கூடும்?
விடிவிலாத் தமிழன் சொந்த
    வீட்டிலும் வறுமை காய்ந்தால்
மடிதட்டி வரவா செய்வான்
    தம்பியின் மலைப்ப சிக்கே? 14.

கொடுமையாம் கொடுமை! என்றன்
குலமே, நீ கேட்டுக் கொள்க!
கடுமையிற் கடுமை என்னல்
உரிமையில் கவலை யற்றல்!
நெடுமையாங் காலமாக
தமிழ்க்குல மரபே, நீதான்
கெடுமையை நலமென் றெண்ணிக்
கீழ்மையை உரிமை என்றாய்! 15.

இலங்கையில் தமிழர் கூட்டம்
இழிசெயப் படுவ தற்கும்,
கலங்கிய அதன்கண் ணீரைத்
துடைத்துநீ காவா தற்கும்—
விலங்கொன்றுன் காலில் கொண்ட
விளைவதே கரணம் என்பேன்!
துலங்குயர் விடுத லைதான்
இருவர்க்கும் துணையாம் இன்றே! 16

தமிழர்க்கிங் குரிமைச் சாவே
விடுதலை வாழ்வாம் என்க!
கமழ்புகழ் பேரி னந்தன்
காலந்தேர் கால மெல்லாம்
அமிழ்கின்ற அடிமைச் சேற்றில்
அலைவுறல் வாழ்க்கை என்றால்,
உமிழ்கந்த வாழ்க்கை யின்மேல்;
ஒருகோடி தீமை சாகும்! 17.

என்னினம் உலகத் தின்மேல்
எந்நாட்டிற் போய்வாழ்ந் தாலும்
பொன்னினம் பொன்னி னந்தான்!
புகழ்பூத்த பேரி னந்தான்!
மின்னினும் கதிரினும் போல்அம்
மேலினம் பழமை என்பேன்!
முன்னினும் பெருமை யாக
முகிழ்ப்பதற் குரிமை வேண்டும்! 18.

உரிமைநல் லுணர்வு பூத்த
ஓரினந் தன்மேல் வந்து
நரிமைகள் மொய்ப்ப தில்லை;
நாய்களும் மோப்ப தில்லை!

உரிமைநல் லுணர்வு செத்த
ஓரினந் தன்னைக் காத்தல்
அருமையின் அருமை யாகும்!
அவ்வினம் கிளைத்தும் சாகும்! 19.

தாய்நாட்டில்— தமிழர் நாட்டில்—
தமிழர்கள் சாகும் போது,
சேய்நாட்டில் அவரின் சேய்கள்
செழிப்புற வாழ்தல் எங்ஙன்?
பாய்கின்ற குருதி யாறு
பாய்ந்தன்றோ உரிமை என்னும்
காய்காய்க்கும்; கனிப ழுக்கும்!
கருத்தினில் வைத்துக் கொள்க! 20.

இலங்கையில் பிசியில் மற்றும்
எந்நாட்டும் தமிழர் வாழ்ந்து
கலங்கையில், தமிழர் நாட்டின்
கருப்பையின் குழந்தை நெஞ்சும்
மலங்கியுள் துடித்தல் வேண்டும்!
மாண்புயிர் வேதல் வேண்டும்!
நலங்குலைந் திழிவு பட்ட
தமிழா,அந் நாளும் உண்டோ? 21.

அயல்நிலந் தாவிப் போந்தீர்!
அடிமையாய் வாழ்த லுற்றீர்!
மயலுறும் கொடிய ராட்சி
மலையினால் மோத லுற்றீர்!
வயலுண்டு; வளமு முண்டு!
வாழ்தமி ழகத்தில்; ஆனால்
செயலுண்டோ, உரிமை யுண்டோ,
உங்களைச் சீந்து தற்கே? 22.

குலைகுலை யாகப் பூத்த
குலமே, செந் தமிழ்ப்பூக் காடே!
விலையிலை உன்மொ ழிக்கே;
விளைவுக்கும் வரலாறில்லை!
அலையலை யாகப் போனாய்
அயல்நிலந் தேடி! அங்கே
இலையிலை யாக வீழ்ந்தாய்!
இருப்பது கிளையொன்றேயாம்! 23.

அடிமரந் தமிழ்நி லந்தான்!
ஆனாலும் மரத்தின் வேரில்
குடிகொளும் ஆரி யந்தான்
கொடுநாகம்! அந்நா கத்தின்
முடிமயல் கொள்ளு மாறு
மகுடிவைத் தூதும் ஆட்சி!
விடியுங்கொல், இருளுங் கொல்லோ,
விறல்தமிழ் மரத்தின் வாழ்க்கை? 24.

விடுதலை ஒன்றே வாழ்க்கை
விடிவுறச் செய்யும்! மாற்றார்
கெடுதலைத் தூள்தூ ளாக்கும்!
கீழ்மையைத் தலைகீ ழாக்கும்!
அடுதலைச் செய்க! உண்மை
ஆர்வத்தால் உணர்வால் பூக்கும்
விடுதலை! அதைநி னைத்தால்
மண்ணன்று; விண் நம் கையில்! 25.

—பெருஞ்சித்திரன்.

---

(முதல் பக்கத் தொடர்ச்சி)

இன்று நாம் பேசாமல் இருப்பதின் நோக்கம் என்ன? நாம் இந்தியை ஏற்றுக்கொண்டோம் என்று பொருளா? [தமிழர்கள் என்பவர்கள் ஏற்கிறார்களோ இல்லையோ, பிராமணத் தமிழர்கள் இந்தியைக் கரைத்துக் குடிக்கின்றார்கள்.] இந்தியை ஏற்றுக் கொண்டோம் என்றால் 1965இல் தமிழகம் இந்தியை முன்னிட்டுத் தன் கருத்தைப் புலப்படுத்தியது ஏன்? தன்மானத் தமிழர்கள் சிலர் தீக்குளித்தது எதற்காக? வரலாற்றைப் புரட்டினால், தென்னகம் வேற்று மன்னர்களால் ஆளப்பட்டதில்லை என்று படித்துப் பூரித்துப் போகிறோமே; இன்றைய நிலைமை என்ன?

இந்தி பேசாத மக்களின் வரிப்பணத்தில்—உழைப்பில் வெயர்வையில் இந்தியைத் துறைதோறும் வளர்க்கிறார்கள் வடவர்கள்! உலகத் தமிழ் மாநாடு நடத்திய தமிழா! இன்று தமிழ் மக்களின் பணத்திலும் இங்கு உலக(!) இந்தி மாநாடு நடக்கிறது. அவர்கள் தங்கள் மொழியை எங்கெல்லாம் பதித்துப் பூரித்துப் போகிறார்கள் தெரியுமா? ஆங்கிலச் சொற்களையும் இந்தி எழுத்துகளில் எழுதிக் கொள்வதில் அவர்களுக்குத் தனி இன்பம். நாம் இந்தியை ஒழிக்க முனைந்து, அதை ஓங்கி வளர விட்டு விட்டோம். நாம் வளர்ந்தோமா? நம்மொழி வாழ்வுப் பெற்றதா?

தென்மொழியும் தமிழர்களிடம் இந்தி எத்துணை ஊடுறுவுகிறது என்பதை அறியாமல் இருக்கிறதா? முடிவாக இந்தியைத் தமிழர்கள் ஏற்றுத்தான் ஆகல் வேண்டுமா என்பதற்கு விடை வேண்டும்.

—கணியன், புதுதில்லி.

# நூறாசிரியம்.

## பெருஞ்சித்திரன்.

பாட்டு: ௩௫

பெறல்தந் தாளே பெறல்தந் தாளே!
அறம்படு நெஞ்சின் அல்லோர்க் கிணங்கி
அழனிற மேனி ஆம்பியற் சாம்ப,
குழலுகச் செங்கண் குழிந்துவெள் ளோடக்
கழைதோள் கூனிக் கவின்கெட, வைகல்
மதியம் போலும் முகவொளி மழுங்க
நுதிவெடிப் புண்டு மடிநனி வறல,
அறலென அடிவயிறு மடியத் திறலறப்
பெறலே வினையாப் பேதை மடமகள்
பொறையோர் பொறைகெடப் பெறல்தந் தாளே!

பொழிப்பு:

(குழந்தைகள் பலவாகப்) பெற்றுத்தந்தவளே! பெற்றுத் தந்தவளே! அறம் அழிந்து போன நெஞ்சையுடைய பொல்லாதவர் பலரின் தழுவலுக்கு இணங்கி, தீயைப் போலும் சிவந்த ஒளிபொருந்திய மேனி, காளாணைப் போல் நிறம் வெளிர்ந்து சாம்பிப் போகும் படியும், அடர்ந்த கூந்தல் உதிர்ந்து அழகிழக்கும் படியும், சிவந்த கண்கள் குழிவு எய்தி வெளிர்நிறம் பாயுமாறும், மூங்கில் போலும் ஒளியும் அழகும் வாய்ந்த இளந்தோள்கள் கூனலுற்று, அழகு கெடும் படியும், காலை நேரத்தில் புலப்படும் முழு நிலவு போல் முகத்தின் ஒளி மழுங்கித் தோன்றுமாறும், காம்புகள் வெடிப்புற்று முலைகள் நன்கு வறண்டு தொங்கும் படியும், மணல் அலைகளென அடிவயிறு மடிந்து விழும்படியும், தன் உடல் திறம் முழுவதும் அற்றுப் போகுமாறும், பெற்றுத் தருவதையே வேலையாகக் கொண்டு பேதைமை சான்ற அவ்வேழைப்பெண், பொறுமையே குணமாகக் கொண்டவர்கள் கூட இவள் செயலைக் கண்டு பொறுமை இழக்கும் படியும், பல குழந்தைகளைப் பெற்றுத் தந்தவளே!

விரிப்பு:

இப் பாடல் புறத்துறையைச் சார்ந்தது. அவள் தலைவன் நயந்த பரத்தை எத்திறத்தாள் என வினவிய தோழிக்குத் தலைவி, "அவள், அறம் போகிய இருண்ட நெஞ்சையுடையப் பொல்லாதவர் பலர்க்கும் இணங்கி, ஒளி பொருந்திய உடல் வெளிறிப் போகும் படியும், அடர்ந்த குழல் உதிர்ந்து அழகிழந்து போகும் படியும், கண்கள் குழி விழுந்து, தோள்கள் கூனுதலுற்று, முகம் ஒளி மழுங்கி நிறந்து மாறும், நுனிகள் வெடிப்புற்றுப் பூரிப்பின்றி மார்புகள் வறண்டு கிடக்கவும், அடிவயிறு மணல் அலைகள் எனும்படி திறங்கி மடிப்புகள் எய்தவும், சூலுற்றுப் பெறுவதையே வேலையாகக் கொண்டவள் போல், அறிவில்லாத அவள், பொறுமை மிக்கவர்களும் பொறுமை யிழக்கும் படி, பல குழந்தைகளைப் பெற்றெடுத்தவள்" —என்று பழித்தாளாக.

'பெறல் தந்தாள்' என்னும் எடுப்புக் குறிப்பினால், தான் இன்னும் 'பெறாத தன்மையுடையள்' என்றும் உணர்த்தினாள் என்க. இருமுறை அடுக்கால், அடிக்கடி பல குழந்தைகளைப்பெற்றவள் என்று தன் வெறுப்புத் தோன்றும் படியும், அவள் முதுமை புலப்படும் படியும் பழித்தாள் என்க.

'அறம்படு நெஞ்சின் அல்லோர்க் கிணங்கி' என்றமையால், அவளை அணுகுவார் தன்மை உணர்த்தப் பெற்றது. அறமல்லாத கொடிய நெஞ்சையுடையவர்கள் தம் ஆசைக்கும் பொருளுக்கும் இணங்கியவள் என்றதால், தன் தலைவனையும் அறம்பட்ட நெஞ்சினன் என்றும், பொருள் மிகுப்பால் நெறியற்றவன் என்றும் கடிந்தாள் என்றபடி.

'அழல் நிற மேனி'– நெருப்பைப் போலும் சிவந்த மேனி. இது, புகழ்வது போலப் பழித்ததாம். தாமரை மலர் போலும் சிவந்த மேனி என்பது போல் சொல்லாமல், நெருப்பைப் போலும் சிவந்த மேனி என்றது, அவள் உடல் குளிர்ச்சியற்று நெருப்பைப் போலும் கனலும் தன்மையுடைய கொடியது, தீயது எனற்கு. ஆனால் அத்தன்மை யுடைய உடலும் இக்கால் எரிந்து சாம்பலாகவே போனது போல் காளானைப் போல், சாம்பி விட்டது என்ன ஆம்பியிற் சாம்ப என்றாள்.

குழல் உக – தலைமயிர் உதிர்ந்து போகும்படி. எனவே அவளுக்குத் தலைமுடி நீண்டிருந்ததைப் புலப்படுத்தினாள் என்க.

செங்கண் – செவ்வரி படர்ந்த கண். புணர்ச்சி மிகுதியில் சிவந்த கண்.

குழிந்து வெள்ளோட – குழியாகி, வெளிறு அடையும்படி:

கழைதோள் கூனிக் கவின் கெட – மூங்கிலைப் போலும் அழகிய தோள், மிகுதிப் புணர்ச்சியினுலும், பிள்ளைப் பேற்றினுலும், அழகு கெடும்படி கூனுதலுற்று நிற்க.

வைகல் மதியம் போலும் – வைகறையின் முழு நிலாப் போல, விடியற்காலையின் முழு நிலவின் ஒளி படிப்படியாக மழுங்குதல் போல், முகத்தின் ஒளி மழுங்கிப் போகு மாறும்:

நுதி – நுனி; முலைக்கண். வெடிப்புண்டு–பலரும் வருடுதலாலும் அடிக்கடி பிள்ளை பெறலாலும் காய்ந்து வெடிப்புற்றுப் போகும் படியும்.

மடி நனி வறல – முலைகள் எழுச்சியின்றி நன்ருக வற்றிப் போகும் படியும். இளமைக்கே அழகுதரும் மார்பகம் நிமிர்தலின்றி தாழ்ந்து தொய்ந்து போகும் படியும்.

அறலென அடிவயிறு மடிய – மணல் அலைகள் போலும் அடி வயிறு மடிதலுறும் படியும்

திறல் அற – உடல் திறன் குன்று மாறும்.

பெறலே வினையா – பிள்ளை பெறுவதையே வேலையாகக் கொண்ட.

பேதை மட மகள் – உடலை விற்று உடலை வளர்த்தல் தீமை பயக்கும் என்று அறியாத பேதைமை சான்ற மடப்பம் பொருந்திய பெண்; மூட மகள்.

பொறையோர் – பொறுமை மிகுந்த சான்ருேர்,

பொறை கெட – இவள் செயல்களால் பொறுமையிழந்து வெகுளும் படியும்,

பெறல் தந்தாள் – பல குழந்தைகளைப் பெற்றுந் தந்தவள். கணவன் அல்லாதவர்களிடத்துத் தொடர்பு கொண்டு பல பிள்ளை-களைப் பெற்றவள்.

இனி, சாம்ப, உக, ஓட, கெட, மழுங்க, வறல, மடிய என்னும் எச்சங்களை, முற்றுகக் கொண்டு, சாம்பிப் போக, அழிந்து போக, மறைந்து போக, ஒழித்து போக, மழுங்கிப் போக, வறண்டு போக, மடிந்து போக என்று ஏசிச் சாவித்தாள் எனவும் கொள்க.

அறமல்லாத நெஞ்சைக் கொண்ட தலைவனுக்கும், அவனைப் போலும் பலருக்கும், அவர்கள் தரும் பொருளுக்காக அணைய இசைந்து, அதனால் தன் நலன்கள் கெடுமாறு பல பிள்ளைகளைப் பெற்றுத் தந்தவளாகும் அப் பரத்தை எனத் தலைவி அவளைப் பழித்து ஏசினள் என்க.

இனி, தான் அத்தனை நலன்களையும் பெற்றிருந்தும், அந் நலன்கள் முற்றும் அழிந்த விலைமகளை அவன் நாடினன் ஆகலின் அவன் அறம் கொன்றவனும் ஆகும்; இனி, அவனைச் சான்றோரும் பொறுக்கார், நான் எவ்வாறு பொறுத்தல் இயலும் என்னுங் குறிப் புத் தோன்ற உரைத்தாள் என்ற படி.

இது, பெருந்திணையும், பரத்தையை ஏசல் என்னுந் துறையு மாகும். 0

# பிறப்பும் நன்கொடையும்!

0. தஞ்சை மாவட்டம், பழையவனம், ஆசிரியர் திரு. மு. பால கிருட்டிணன் அவர்களின் துணைவி, அமிழ்தவல்லியம்மைக்குக் கடந்த துலைத்திங்கள் 5-ஆம் பக்கல் (22—10—74) அன்று பெண்குழந்தை பிறந்ததின் நினைவாக தென்மொழி வளர்ச்சிக்கு உருபா. 10/- நன்கொடையளித்ததுடன், குழந்தைக்குப் பெயர் சூட்டவும் வேண்டியுள்ளார்கள். தென்மொழி அம்மகவுக்குப் பைந்தமிழ் என்று பெயர் சூட்டி வாழ்த்துகிறது.

0. வடார்க்காடு மாவட்டம், வாணாபுரம் அரசுயர் பள்ளித் தமிழாசிரியர் புலவர் திரு அ.தங்கவேலு அவர்களின் துணைவியார், கற்பகத்திற்கு, கடந்த மடங்கல் திங்கள் 20-ஆம் பக்கல் (5-9-74) அன்று பெண் குழந்தையொன்று பிறந்து, அதற்குப் பொற்கொடி என்று பெயரிட்டதன் நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்கு உருபா 5/- அன்பளிப்பாக அளிக்கப்பட்டது. தென்மொழி நன்றி தெரிவித்துப் பொற்கொடியை வாழ்த்துகின்றது.

# திரவிடரின் தனித்தன்மை புனைவா, உண்மையா?

பர். ஆர். ஈ. ஆசர்
மொழிநூல் ஆய்வாளர், எடின்பரோ பல்கலைக் கழகம்;
தமிழாக்கம்: பி. இராமநாதன், வழக்குரைஞர்.

*[தாளிகை "தென் ஆசிய ஆய்விதழ்"– ஆசிரியரின் சுருக்க முன்னுரை :]*

*தென் ஆசியாவில் உள்ள இசுலாமியர்களைப்போல, தென்னிந்திய திரவிடர்களும், இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள பிற மக்களிடமிருந்து வேறுபட்ட தனித் தன்மையுடையவர்கள் தாங்கள் எனக் கருதுகின்றனர். மேலெழுந்தவாரியாக வடக்கும் தெற்குக்கும் இடையிலுள்ள வேறுபாடுகள் தெளிவாகத் தெரிவனவேயாகும். எனினும் தமிழ்நாட்டைத் தவிர, பிற திரவிடப் பகுதிகளில் தனித்தன்மை நிலை நாட்டும் வலுவான இயக்கம் தோன்றவில்லை. திரவிடர் தனித்தன்மையும் தமிழர் தனித் தன்மையும் ஒன்று எனக் கூறுமுன் தமிழப் பண்பாடு வங்காளி முதலிய பிற இந்திய மொழிப் பண்பாடுகளிலிருந்து எந்த அளவுக்கு வேறுபட்டது, என்று பார்க்க வேண்டும். கீழே வெளிவரும் ஆய்வு, முதலில் "தென் ஆசியா ஆய்விதழ்"இன் 1972–ஆம் ஆண்டு ஆசிரியர் கூட்டத்தில் இவ்விதழில் இதற்கு முன்னதாக வெளியிடப்பட்டுள்ள கட்டுரையுடன் ஒன்றாகப் படிக்கப்பட்டதாகும். தமிழ்பற்றிக் கூறப்படும் ஒரு சில மிதமிஞ்சிய கூற்றுகளை ஏற்றுக்கொள்ள வேண்டாமெனினும், தமிழ் உண்மையிலேயே சிறப்பான தன்மை உடையது என்பது இக்கட்டுரையின் முடிவு ஆகும்.]*

**தெளிவாகத் தெரியும் தெற்கு :** மேலெழுந்த வாரியாகப் பார்க்கும் பொழுது தென்னிந்தியா வடஇந்தியாவினின்றும் வேறுபட்டது என்பதில் ஐயமில்லை. இயற்கைக் காட்சிகளாயினும் சரி, மாந்தர் ஆற்றலினால் உருவான ஆக்க வேலைகள் ஆயினும் சரி, அறிவு ஆயினும் சரி, கலை உணர்வு ஆயினும் சரி, தென்னிந்தி

1. இக் கட்டுரைக் கருத்துகள் சில நமக்கு உடன்பாடானவை அல்ல எனினும் கட்டுரையை அப்படியே தந்துள்ளோம்.
2. இது "தென் ஆசிய ஆய்விதழ்" 6-ஆம் மடலம் முதல் இதழில் 1972 அக்டோபரில் வெளிவந்த கட்டுரையின் தமிழாக்கம். இக்கட்டுரை பற்றிச் சில செய்திகள் ஏற்கெனவே தென்மொழி சுவடி 11-ஓலை 1, 2 (1973 ஜூலை-அக்டோபர்) ஆகியவற்றில் வெளிவந்துள்ளன.

யாவில் இவற்றைக் காண்பவர் "இவை வேறு நாட்டைச் சார்ந்தவை" எனத் தவருகக் கருதிவிட இடமில்லாத வகையில், அவையனைத்தும் தனித்தன்மை வாய்ந்தவை.

கோயில் கட்டட அமைப்பு (குறிப்பாகக் கடந்த 10 நூற்றுண்டு களில் கட்டப்பட்ட கோயில்கள்) இசை, நாட்டிய வடிவங்கள், குமுகாய வழக்கங்கள், உடை வகைகள் இவையெல்லாம் வடநாட்டி லும் தென்னுட்டிலும் மாறுபட்டவை என்பது தெளிவாய்த் தெரியும். எனினும் தென்னிந்தியா ஒரே வகைத் தனித்தன்மை வாய்ந்த தனிப் பகுதி (Unit) என முடிவு செய்ய மேற்சொன்ன கரணியங்கள் போதுமானவையல்ல. எடுத்துக் காட்டாக, கேரளத்திலுள்ள கோயில் களுள் சில தமிழ்நாட்டில் மிகுதியாகக் காணப்படும் கோயிலமைப்பே போன்ற அமைப்பைக் கொண்டவையாகும். அதே நேரத்தில் வேறு சில கேரளக் கோயிலமைப்புகளைக் கேரளத்தில்தான் காண இயலும். நாட்டியத்தில் பரத நாட்டியமும், கதகளியும் தென்-ளுட்டின் தனியுடைமைகள். பரதநாட்டியம் தமிழ் நாட்டுக்கும் கதகளி கேரளத்துக்கும் சொந்தமாகும். மலையாளிகள், தமிழர் ஆகிய இருவர் உடை வகைகள் ஏறத்தாழ ஒன்றேயாகும்.

வரலாறும் மொழியும்: மேற்சொன்னது எவ்வாருயினும் ஆகுக. தென்னிந்தியாவின் தனித்தன்மையை (அஃது இருந்தால்) வரலாறு, மொழி ஆகிய நிலைகளின் மூலந்தான் தென்னிந்தியன் ஒருவன் நிலைநாட்ட முயலுவான். அந்நிலைகளைக் காண்போம். இந்தியாவில் முண்டா மற்றும் திபேத்திய, பர்மிய மொழிக் குடும்பங்களைச் சார்ந்த மொழிகளும் சில உளவெனினும், அவற்றை இப்போதைக்கு மறந்து விடலாம். மொழி அடிப்படையில் அடிப்படை வேறுபாடு வடக்கிலுள்ள ஆரிய மொழிகளுக்கும், பல நூற்றுண்டு களாகத் தெற்கில் மட்டும் இருந்து வரும் திராவிட மொழிகளுக்கும், இடையிலுள்ள வேறுபாடேயாகும். இந்தியாவுக்கு வெளியில் உள்ள எந்த இடத்திலும் இருந்து, திரவிடர் இங்கு வந்து குடியேறினர் என்று முடிவு செய்வதற்கான நம்பத் தகுந்த அடிப்படை எதுவு-மில்லை. "இந்திய வரலாற்றின் பொதுப் போக்கு" (பம்பாய், 3-ஆவது பதிப்பு 1956, பக்கம் 59) என்னும் நூலில், கே. எம். பணிக்கர் கூறுவதுபோல் இஃது ஒரு "போலிச் சிக்கல்" என்று விட்டு விடலாம். ஆரியர் இந்நாட்டிற் குடியேறு

வதற்காகப் படையெடுத்து வருவதற்கு நெடும் பல்லாண்டுகளுக்கு முன்னர் இருந்தே, இந்தியாவில் திரவிடர் வாழ்ந்து வந்தனர் என்பது உறுதி. இப்பொழுது திரவிட மொழி பேசும் மக்கள் ஒரிசாவில் உள்ளனர்; பீகாரில் உள்ளனர். மேற்குப் பாகித்தானத்திலும் உள்ளனர். எனவே ஒரு காலத்தில் இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் திரவிட மொழி பேசும் மக்களே வாழ்ந்து வந்தனர் என முடிவு செய்வதற்கு அடிப்படை உள்ளது. சிலர் இதற்கும் ஒருபடி மேற்போய் சிந்துவெளி நாகரிகமும் திரவிடருடையதாகத்தான் இருந்திருக்க வேண்டும் என்று கூறியுள்ளனர். இஃது பெரும்பாலும் சரியான உன்னிப்பாக இருக்கலாமெனினும், மொகஞ்சோதாரோ முத்திரைகளில் உள்ள மொழி திராவிட மொழி என்று திட்டவட்டமாக மெய்ப்பிக்கப்பட்டு விட்டதாகக் கூறமுடியாது. அவ்வாறு மெய்ப்பித்ததாக அண்மை யில் சிலர் வெளியிட்டுள்ள கருத்துகளை அப்படியே ஏற்றுக் கொள்ள இயலாது.

இந்தியாவெங்கிலும் வரலாற்றுக் காலத்திற்கு முன் பேசப்பட்ட மொழி என்ன என்பதுபற்றி இனிமேல்தான் நாம் (மேற்கொண்டு நடக்கும் ஆராய்ச்சிகள் மூலம்) திட்ட வட்டமாகத் தெரிய வேண்டி யுள்ளது. இஃது எவ்வாறுயினும் ஆகுக. இப்பொழுது இந்தியாவின் தென்கோடியிலுள்ள மைசூர், ஆந்திரம், கேரளம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் மட்டுமே திரவிட மொழிகளைப் பேசுவோர் நிறைந் துள்ளனர். வடஇந்தியப் பேரரசுகள் எவையும் தென்னிந்தியா முழுவதிலும் எக்காலத்திலும் அரசோச்சியதில்லை என்பதைத் தென்னிந்திய வரலாறு நமக்குக் கூறுகிறது.

தென்கோடியில் இருந்த சேர, சோழ, பாண்டிய நாடுகள் மௌரியப் பேரரசுக் காலத்தில் கூட தனியரசுகளாகவே இருந்தன. அது போலவே பிற்காலத்திலும், ஐரோப்பியர் இந்தியாவைக் கைப்பற்றும் காலம் வரையிலும், தென்னிந்தியாவிற்குள் இசுலாமியர் படையெடுப்புகள் நுழையாவண்ணம் விசயநகரப் பேரரசு தடுத்து நிறுத்தி வந்தது. (சிறுபான்மையினராயினும் கணிசமான எண்ணிக்கையில் கேரளாவில் இசுலாமியர் இருப்பதற்குக் கரணியம் முகலாயப் பேரரசுக் காலத்துக்கும் சில நூற்றுண்டுகளுக்கு முன்னர் அந்நாட்டுக்கு அராபியர்கள் வந்து குடியேறினமையே ஆகும்).

கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாகவும் அதற்கு மேலாகவும், இந்தியாவில் ஆரியரும், திரவிடரும் ஒரே அரசின்கீழ் இருந்தது இல்லை என்பது உண்மையாகலின் இருபிரிவுகளிடையேயும் வெறுப் புணர்ச்சியே நெடுநாளாக நிலவியது எனக் கூறிவிடலாமா? அவ்வாறு கூற இயலாது. கி. மு. மூன்றும் நூற்றுண்டை ஒட்டியே இந்தியாவின் தென்கோடி வரையிலும் ஆரியப்பண்பாடு அமைதி வழியில் ஓரளவுக்குப் பரவியிருந்தது எனக்கூறிடச் சான்றுகள் உண்டு. அக்காலத்திலிருந்து மெதுமெதுவாக ஆரியப்பண்பாடு பரவி வந்துள்ளது. மேலும் மேலும் அரசர்கள் வேதச் சடங்குகள் பரவுவதற்கு ஆதரவு தந்தனர். தமிழர் கடவுள்கள் வடவர் கடவுளரோடு ஒட்ட வைக்கப்பட்டன. சமயத்துறையில் வடக்குக்கும் தெற்குக்கும் வேறுபாடு பெரிதும் மறைந்தது. இந்தியாவில் பண்பாட்டின் பிறகூறுகள் அனைத்தும் கட்டடக்கலை, படிமக் கலை, ஓவியம், இயல், இசை, ஆகியவையும் சமயத்தோடும் இணை பிரியாது இருந்தனவாதலின், இக்காலத்தில் திரவிடர் தம் தனிமை நிலைநாட்டும் இயக்கத்தின் வேரைக் கண்டு பிடிப்பது கடினமே. மேல்நாட்டு அறிஞர்கள் ஆராய்ச்சியுரைகளுக்கும் அவ்வியக்கத்தின் வளர்ச்சியில் பங்கு இருந்தது எனலாம்.

**பிறநாட்டு அறிஞர் கருத்துரைகள் :** வங்காள அரையக் கழகத்தின்முன் 1786ஆம் ஆண்டு நிகழ்த்திய புகழ் பெற்ற பேருரை ஒன்றில் ஐய(சர்)வில்லியம் சோன்சு சமுற்கிருதமும் ஐரோப்பிய மொழிகளில் பெரும்பாலனவும் ஒரு குடும்பத்தினவாகும் என்ற கருத்தை வெளியிட்டார். அதற்குச் சில காலம் கழித்து இந்திய மொழிகள் அனைத்தும் சுமசுக்கிருதக் குடும்பத்தைச் சார்ந்தனவென்றும் அவை யனைத்தும் இந்தோ-ஐரோப்பிய மொழிக்குடும்பத்தைச் சார்ந்தவை யென்றும் (தவருக) பலரும் கருதிவரத் தொடங்கியதாகத் தோன்றுகிறது. எடுத்துக் காட்டாக 1804-இல் வில்லியம்காரி வெளியிட்ட சுமசுக்கிருத இலக்கணத்தின் முன்னுரையில், தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகியவை, இந்துத்தானி, குசராத்தி, வங்காளி, மராத்தி, ஒரியா ஆகிய மொழிகளோடு ஒரு குழுவினவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இதற்கு ஏறத்தாழப் பத்துப் பதினைந்து ஆண்டுகள் கழித்துத்தான், சென்னை அரசுக்கு அலுவலரான எப். டபிள்யு எல்லிசு தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளில் சமற்கிருதத்திலிருந்து கடன்பெற்று வழங்கி

வந்த சொற்களைக் கொண்டு காரி ஏமாறி விட்டார் என்றும், அந் நான்கு மொழிகளும் வேறு சில சிறுமொழிகளும் சேர்ந்து முற்றிலும் வேறுபட்ட வேறொரு மொழிக் குடுமபத்தைச் சார்ந்தவை என்பதைக் காரி அறிய இயலாது இழுசகினுர் என்றும் நிறுவினர். எல்லிசின் கருத்தை வேறு சிலரும் பின்பற்றினர். இறுதியாக 1856-ஆம், ஆண்டில் இராபர்ட்டு கால்டுவெல் உடைய வரலாற்றுப்புகழ் வாய்ந்த திரவிட அல்லது தென்னிந்திய மொழிக் குடும்பத்தின் ஒப்பிலக்கணம்' என்னும் நூல் வெளிவந்தது. தென்னிந்திய மொழிகள் சமற்கிருதத்திடம் இருந்து தோன்றவில்லை என்பதை இந்நூல் முடிவாக நிறுவியது. அம்மொழிக் குடும்பத்திற்குத் திரவிட மொழிகள் என்னும் பெயர் வழங்கத் தொடங்கியதற்கும் இந் நூலே காணியமாகும். திரவிடமொழிக் குடும்பத்தின் தலையாய மொழிகள், சிறுமொழிகள் ஆகியவற்றை விளக்கும் பல வேறு நூல்கள் அதன்பின் வெளிவந்தன. அக்குடும்பம்பற்றி அணைவரும் மேலும் மேலும் அறியலாயினர்.

கால்டுவெல் நூலின் மொழி ஆராய்ச்சி விளக்கங்களுக்காகத் தென்னிந்திய அரசியல்காரர்கள் அந்நூலைப் போற்றினுர்களில்லை என்பதும், திராவிட மொழிகள் சமற்கிருதத்தோடு தொடர்பற்ற தனிமொழிகள் என்னும் அந்நூலின் அடிப்படைக் கோட்பாட்டின் காணியமாகவே அவர்கள் அதைப் போற்றினர் என்பதும், கூறுமலே தெரியும். தென்னிந்தியா தனிததன்மை வாய்ந்தது என்பதை நிறுவ விரும்பும் எவரும் இசைவோடு மேற்கோள் காட்டக்கூடிய பல ஆய்வுரைகள் அந்நூலில் உள்ளன. எடுத்துக் காட்டு: தமிழில் வட சொற்கள் பெருமளவில் வழங்கி வந்ததைப் பலர் சுட்டிக் காட்டியிருந்ததைக் குறிப்பிட்டுக் கால்டுவெல், "இலத்தின் வேர்ச்சொற்களை விட்டு விட்டால் ஆங்கிலம் தெளிவற்ற மொழியாகி விடும். ஆனுல் தமிழோ தான் வழங்கிவரும் சமற்கிருதச் சொற்களுள் பெரும்பாலானவற்றையோ முழுவதையுமோ உடனடியாக ஒழித்துவிட முடியும்; ஒழித்தால் தூய்மையும் இனிமையும் மிகுந்த நடையை அம்மொழி பெறும் என்று கூறுகிறுர். (1956-ஆம் ஆண்டுப் பதிப்பு-பக்கம் 47).

மேலும் அவர் கூறுகிறுர். "சொல்வளத்தில் தலை சிறந்த மொழி தமிழ். தேவை காரணமாக அது சமற்கிருதச் சொற்களை வழங்குவதில்லை; காலத்தின் வேறுபாடு கரணியமாகவும், வலிந்து கடன்பெற வேண்டும் என்னும் எண்ணம் காரணமாகவுமே அது

கடன் பெறுகிறது.'' தென்னிந்தியாவில் பிற மொழிகளைத் திணிக்க எடுக்கப்படும் எம்முயற்சியும் தோற்கும் என்னும் சிறந்த எச்சரிக்கையையும் கால்டுவெல்லே தந்தார்: சமற்கிருத மொழி சமயத் துறையில் தலைமை தாங்கி வலிமை வாய்ந்த 'சாதி'யினருடைய மொழி; அத்தகைய சமற்கிருதத்துக்கு எதிராகவே இந்நாட்டு திராவிட மொழிகள் கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலான போராட்டத்தில் தோல்வி காணவில்லை எனில், இனி உலகில் எம்மொழி நுழையவரினும் அதனை எதிர்த்து வெற்றி கொள்ளும் என்பதற்கு ஐயமில்லை.

மொழிகளின் வேர்ச்சொல் ஒப்புமை காண்பதில் கால்டுவெல்லைப் போல் பெரும் ஆர்வம் இல்லாத அவர் காலத்து ஐரோப்பியர் வேறு சிலர், தம் திரவிட மொழியறிவைக் கொண்டு, அம்மொழிகளில் உள்ள இலக்கியத்தை பயிலலாயினர். சமற்கிருதம், பண்டை ஐரோப்பிய மொழிகள் ஆகியவற்றில் உள்ள மாபெரும் இலக்கியப் படைப்புகளோடு ஒப்பிடுகையில், தென்னிந்திய மொழிகளில், குறிப்பாகத் தமிழில் பழங்காலத்திலும், இடைக்காலத்திலும் படைக்கப் பட்ட செய்யுள் நூல்கள் எவ்வகையிலும் தாழ்ந்தவையல்ல என்று ஒரு நூற்றுண்டுகளுக்கு முன்னரே அவர்கள் ஆணித்தரமாக கருத்து வெளியிட்டனர். அக் கருத்துகள் இன்னும் மறுக்கப்படாமல் உள்ளன. ஒரோவழி திராவிடக் கொள்கையினர் ஐரோப்பிய அறிஞர்கள் சிலருடைய சில கருத்துகளை (தம் கொள்கைக்கு மாறுன கருத்து வரும் இடங்களில்) மறந்துவிட வேண்டியுள்ளது! எடுத்துக்காட்டாக அவர்கள் கில்பர்ட் சிலேட்டர் (''இந்தியப் பண்பாட்டில் திரவிடர் பங்கு ''இலண்டன் 1924; பக்கம் 150''), 'சாதி' திரவிடர் உண்டாக்கியது'' என்று கூறுவதை ஏற்க மறுக்கின்றனர் எனினும் அதே சிலேட்டர் கூறும் (அந்நூல் பக்கம் 80) ''ஆரியர் இந்தியாவிற்குள் படையெடுக்கும் காலத்தில் அவர்களுக்கு இருந்த நாகரிகத்தைவிட (அதை நாகரிகம் என அழைக்க இயலுமா என்பதே ஐயப்பாடானது) அக் காலத்திலேயே திரவிடர் நாகரிகம் சிறப்பாகவும் மிக வளர்ச்சி பெற்றும் விளங்கியது'' என்னும் கருத்தை விருப்புடன் ஏற்றுப் பயன் படுத்துகின்றனர்.

கால்டுவெல் தம் ஒப்பிலக்கணத்தை எழுதிக் கொண்டிருந்த கால கட்டத்தில், தென்னிந்திய அறிஞர்கள் பல நூற்றுண்டுகளாகப் பெரிதும் மறக்கப்பட்டுப் போன சில நூல்கள் உட்படப் பண்டைத்

தமிழ்ச் செய்யுள் நூல்களைக் கண்டு பிடித்து, அச்சிட்டு வெளியிடத் தக்க வகையில் ஆய்வு செய்து வெளியிட்டு வரலாயினர். இக் காலத்தில் கிட்டும் தமிழ் நூல்கள் யாவற்றிலும் தொன்மை வாய்ந்த ''கழகப்பாடல்''களும் அவ்வாறு வெளிவந்தனவே யாகும். அப் பாடல்களைப்பற்றி இரண்டு பொருள்களைக் குறிப்பிட வேண்டி யுள்ளது. தமிழ் இலககியத்தின் தலையாய படைப்புகள் என அவை பெரும்பாலும் கருதப்படுகின்றன. அது சரியான கருத்தேயாகும். மாந்த குலத்தின் புலமைப் படைப்புகளில் தலையாயவற்றில் அவற்றுக்கும் இடம் உண்டு. இரண்டாவது, பிற இந்திய மொழிகள் உள்ள தொடக்க காலப் பாடல்களைபோல் அல்லாமல் அக்கழகப் பாடல்கள் பெரும்பாலும் உலகியல் பற்றியவை; சமயம் பற்றியவை அல்ல; எனவே அவற்றுள் ஆரிய வாடை மிக மிகக் குறைவு; கழக இலக்கியங்கள் அச்சில் வெளிவரத் தொடங்கிய கால முதல் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சியும் தொடங்கியது.

இந்தப் பழங்கால நூல்களின் காலம்பற்றி ஓரளவுக்குக் கருத்து வேறுபாடு உள்ளது. அவை கிறித்துப் பிறப்பினை ஒட்டிய காலத்தவை என்பது சரியானதாக இருக்கலாம் என்பது பல ஆராய்ச்சியாளர் கருத்து. கன்னடம், தெலுங்கு, மலையாள இலக்கியங்கள் பழந்தமிழ் இலக்கியங்களைவிட ஐந்திலிருந்து பத்து நூற்றுண்டுகள் வரைப் பிந்தியவை. அப் பிற்காலங்களில் திராவிட மொழி இலக்கியங்களில் ஆரிய ஊடுருவல் வரவர அதிகமாகிக் கொண்டே வந்தது. எனினும் இந்திய இலக்கிய வரலாற்றில் முகாமை வாய்ந்த இலக்கியங்கள் அப் பிற்காலத்திலும் இயற்றப்படாமல் இல்லை. கம்பன் எழுதிய தமிழ்க் கம்பராமாயணமும் எழுத்தச்சன் எழுதிய மலையாள இராமாயணமும் அத்தகைய நூல்கள். அதுபோல இந்தியாவில் முதன் முதலில் தோன்றிய உண்மையான பத்திப் பாடல்கள் தமிழ் மொழியில் இடைக்காலத்தில் தோன்றிய இறை வழிபாட்டுப் பாடல்களேயாகும். எனினும் தமிழில் தோன்றிய பத்தி இயக்கத்தைப் பின்பற்றியே இந்தியத் துணைக்கண்டத்தின் வேறு பகுதிகளில் பெரிய பத்திப் புலவர்கள் தோன்றினர் என்று கரணிய கரும முறையில் நிறுவ இயலாது. வேறு பகுதிகளில் பத்திப் பாடல்கள் தாமாகவே தோன்றி யிருப்பினும் ஆகுக. இத் துறையில் முதலில் தோன்றியவர்கள் கி. பி. ஏழாம் நூற்றுண்டிலும் அதன் பின்னரும் தோன்றித் தமிழில் பாடிய பத்திப் புலவர்களே ஆவார் என்ற கருத்தில் மாற்றமில்லை.

**திரவிடர் தனித்தன்மையின் ஐந்து கூறுகள்:** திரவிடர் தனித்தன்மைக் கொள்கையினர் எனும் அடிப்படையில் பின்வரும் மெய்ம்மைகளைக் குறிப்பிடலாம்.-

(1) தென்னிந்தியாவிலுள்ள திரவிட மொழிகள் வடக்கிலுள்ள இந்தோ ஐரோப்பிய மொழிகளொடு தொடர்பற்றவை;

(2) ஆரியர் இந்நாட்டுக்குள் நுழைவதற்குப் பன்னெடுங் காலத்துக்கு முன்னிருந்தே திரவிட மொழி பேசும் மக்கள் இந்தியாவில் வாழ்ந்து வந்தனர்.

(3) திரவிடத் தென்னகம் தன்னகத்துக்கு வெளியில் உள்ள ஓர் ஆட்சிக்கு எக்காலத்திலும் முழுக்க உட்பட்டு இருந்ததில்லை.

(4) கிடைத்துள்ள பழந்திரவிட மொழி இலக்கியங்கள் மிகவும் தொன்மை வாய்ந்தவை மட்டுமன்றிச் சமற்கிருத ஆக்கங்களை அடிப்படையாகக் கொண்டவையுமல்ல.

(5) பிற்காலத்தில் கூட இந்திய இலக்கியத்துக்குத் தமிழ் மூலப்படைப்புகளைத் தந்து வளப்படுத்தியுள்ளது- திரவிட அறிஞர்கள் சமற்கிருத மொழியில் இந்து சமய மெய்மம் (தத்துவம்) பற்றி எழுதியுள்ள நூல்களும் குறிப்பிடத்தக்கவையே. எனினும் அவற்றைத் திரவிடத் தனித்தன்மைக் கொள்கையினர் பொருட்படுத்த விரும்பார் என்பது தெரிந்ததே. (தொடரும்)

---

## 'வடசொல்'லும் 'சமற்கிருத'மும்!

வடசொல் என்பதற்கும் சமற்கிருதச் சொல் என்பதற்கும் ஒரு வேற்றுமையுண்டு. தொன்றுதொட்டு வடநாட்டில் தனிச் சிறப்பாக வழங்குஞ் சொல்லெல்லாம் வடசொல்லே! சமற்கிருதச் சொல் என்பது, வேத ஆரியர் வந்தபின் புதிதாக அமைக்கப்பட்ட ஆரியச் சொல். ஆரியர் வருமுன்பே, வட திரவிடர் (பிராகிருதர்) பல புதுச் சொற்களைப் புனைந்திருந்தனர். அவையும் வடசொல். ஆகவே, வடசொல் என்னும் பெயர், ஆரியமல்லாத வடநாட்டுச் சிறப்புச் சொற்கும், சமற்கிருதச் சொற்கும் பொதுவாம். எல்லாச் சமற்கிருதச் சொல்லும் வடசொல்லாகும்; ஆயின் எல்லா வடசொல்லும் சமற்கிருதமாகா. 'ஆதி' என்னும் சொல் வடசொல்; ஆனால் சமற்கிருதமன்று.

—பாவாணர், (தமிழர் மதம்).

# மறைமலையடிகளாரின் செய்யுள் மாண்பு!

—பெருஞ்சித்திரன்.

அடிகளார் இச் சிறிய நூலாகிய சோமசுந்தரக் காஞ்சி யென்னும் நூலை மூன்றே நாட்களில் எழுதி முடித்தாரென்றும், அந் நூல் அவரின் இருபத்து நான்காம் ஆண்டில், அஃதாவது திருவொற்றி முருகர் மும்மணிக்கோவை செய்த இரண்டாண்டுக்குள் செய்யப் பெற்றதென்றும் முன்பே கண்டோம். அடிகளார்க்கு ஆசிரியராக விளங்கிய சோமசுந்தரர் மேல் அடிகளார் எத்தகைய மதிப்பும் வணக்கமும் கொண்டு இந்தக் கையறு நூலை எழுதியிருப்பார் என்பதை இதனைப் படிப்பவர்கள் நன்கு உணரலாம்.

இந்நூல் மிகவும் சிறியதானாலும் அரிய பெரிய நுட்பங்களைக் கொண்டது. கையறுநிலையாக எட்டு நிலைமண்டிலப் பாடல்களை யும், தாபதநிலையாக 10 நிலைமண்டிலப் பாடல்களையும் மன்னைக் காஞ்சி என்னுந் துறையின் கீழ் 67 அடிகொண்ட அகவற் பாட்டொன்றினையும் கொண்டது. திருவொற்றி முருகர் மும்-மணிக் கோவை அகத்துறையைச் சார்ந்த நூலாகவும், சோமசுந்தரக் காஞ்சி புறத்துறையைச் சார்ந்த நூலாகவும் விளங்குவதும், இவ்விரண்டு துறைகளிலும் இரண்டே செய்யுள் நூற்களை அடிகள் செய்ததும் வியப்பாக விருக்கின்றன. இதில் இன்னொரு வியப்பும் உண்டு. சோமசுந்தரக் காஞ்சி என்னும் இந் நூல் எழுந்த காலை, இந்நூலின் கருத்துகளிலும் இலக்கண அமைப்பிலும் அற்றைநாட் பெரும்புலவர் எனப்படுவோர் சிலர் குற்றங்கண்டு மறுப்புரைத்தனர். அக்குற்றங்களுக்கெல்லாம் மறுப் பாக அடிகளார் ஓர் உரைநடை நூலை எழுத வேண்டியிருந்தது. அவ்வுரை நடைநூல் சிறியதேயாயினும் அதுவும் மிகப்பெரிய விளக்கங்களைக் கொண்டு சோமசுந்தரக் காஞ்சியாக்கம் என்னும் பெயருடன் இந்நூலையொட்டிய சிறப்புடனும் விளங்கு கின்றது. அதனை அடிகளாரே கீழ்வருமாறு உரைக்கின்றார்.

“சோமசுந்தரக் காஞ்சியின் மேலெழுந்த மறுப்பிற்கு மேல் எதிர்மறுப்பாக வெழுந்த இஃது, அப்போலி மறுப்பின்கண் சொல்லப் பட்ட குற்றங்கள் முழுமையும் பரிகரித்து, அக்காஞ்சியினைத்

தொல்லாசிரியா இலக்கண நூல் இலக்கிய நூல் அளவை நூல் மெய்ப்பொருள் நூல் முதலியவற்ரோடு படுத்து ஆக்கிக் கொண்டமையிற் சோமசுந்தரக் காஞ்சி யாக்கம் என்னும் பெயர்த்தாயிற்று".

'சோமசுந்தரக் காஞ்சி' என்னும் கையறுநிலை நூல் அடிகளார் போலும் ஆசிரியரின் மாணவர் எழுதுதல் கூடாது; அதற்கு இலக்கண மரபு இல்லை' என்பதும் பிற சில குற்றங்களும் காஞ்சியாக்கத்திற்குக் கரணியங்களாக விருந்தன. அதற்குக்,

*'கழிந்தோர் தேஎத் தழிபடர் உறிஇ*
*ஒழிந்தோர் புலம்பிய கையறு நிலையும்'*

எனும் தொல்காப்பியப் புறத்திணையியல் எசு-ஆம் நூற்பாவும், அதற்குரையாகக்,

*"கணவனெடு மனைவியர் கழிந்துழி அவர்கட்பட்ட அழிவு பொருளெல்லாம் பிறர்க்கு அறிவுறுத்தித் தாம் இறந்துபடா தொழிந்த ஆயத்தாரும், பரிசில் பெறும் விறலியரும் தனிப்படருழந்த செயலறு நிலைமையானும்"*

—என்று நச்சினர்க்கினியனர் செய்த உரையும் பிறவும் சான்றுகளாகக் காட்டப் பெற்றன. அக்குற்றத்திற்கு மறுப்பாக அடிகளார் எழுதிய காஞ்சியாக்கம் என்னும் விளக்கக் கட்டுரையில், நூலாய்வார் பற்றிய தகுதி, தகாத நிலைகளும், அகம் புறம் என்னும் ஒழுக்கங்களின் இயல்புகள் இவைஇவை என்பதும், அவற்றுள் கையறுநிலை, தாபதநிலை, மன்னைக்காஞ்சி முதலிய முப்புறத் திணைகள் இன்னின்ன விளக்கங்கள் கொண்டனவென்பதும், நூல் தொடக்கம் பற்றிச் சாற்றிய ஆநந்தக் குற்றம் என்பது என்னவென்பதும், அவற்றை முந்துபழம் நூற்களில் எவ்வாறு காட்டி நிறுக்கலாம் என்பதும் மிக மிக விரிவாக 46 பக்கங்களில் கூறப் பெற்றுள்ளன. அவற்றை ஈண்டு விரிக்கில் மிகப் பெருகுமாகலின், அவற்றைத் தவிர்த்தது அடிகளாரின் சோமசுந்தரக் காஞ்சியின் கையறுநிலைச் சிறப்பை ஒருவாறு சுருக்கமாகக் காண்போம்.

இந்நூல், மெய்யாசிரியர் ஒருவர் மேல் உண்மை மாணவர் கொண்ட மெய்யன்பிற்கும் மதிப்பிற்கும் ஓர் எடுத்துக் காட்டாக, இலக்கணம் போலும், இலக்கியமாகவும் விளங்கும் ஓர் அரிய நூல்!

மெய்த்திரு. சோமசுந்தரர், மறைத்திரு. மறைமலையடிகளார்க் குற்ற மெய்ப்பொருளாசிரியர். சைவசமயக் கொண்முடியின் கடல் போலும் பரப்பைக் காட்டிய குருவர்; அடிகளின்பால் பேரன்பு கொண்ட அருள் நெஞ்சினர். அவரின் பெரும் பிரிவைத் தாங்கிக் கொள்ளாத அடிகளாரின் மென்மை நெஞ்சம் கதறும் ஓலங்களாக அமைந்தவை இப் பாடல்கள். கையறு நிலையாக விளச்சீர் விரவிவர இவரெழுதிய இவ்வெட்டுப் பாடல்களும், சைவக் கருத்துகள் நிவந்து விளங்கும் எண்மணிக் கோவையாக அமைந்தவை. ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் ஓகார இசை வருவது இப்பாடல்களின் அவலச் சுவைக்கே கொடுமுடி வைத்ததுபோல விளங்குகின்றது. ஒவ்வொரு பாட்டின் இறுதியடியும்,

*"சோமசுந் தரனெனு நாமமொ டிங்குநீ தோன்றிய*
*தெங்குருவே!"*

—என்று, கூவிளம் கருவிளம் கூவிளம் கூவிளம் கூவிளம் கூவிளங்காய்-எனும் படுப்பிசை வாய்பாட்டான் முடிவது கற்பார் மனத்தைக் கரைந்துருக வைக்கின்றது.

இப் பாடல்களைப் பாடும்பொழுது அடிகள் கண்ணீர் வடித்துக் கரைந்ததாக முகவுரையில் அடிகளே கூறுகின்றார். அவர் கூற்று இது :

"காஞ்சிப் படிக்களைக் கண்ணீர் ஒழுகக் கலுழ்ந்த படியாய்ப் படித்து முடித்தோம்; ஏனையோர் பாடிய இரங்கற்பாக்கள் உண்மையில் இரங்கற்பாக்களாய் இல்லாமல் ஆசிரியரின் சித்தாந்தப் பேருணர்ச்சியினையும், அவர்களின் சொல்லாற்ற லினையும், அவர்களுடன் சமய வழக்கிட்டுத் தோல்வியுற்றார் நிலைகளையுமே பெரும்பாலும் எடுத்தியம்பி அவையிலிருந்தார்க்கு நகையினையுண்டாக்கின. ஆனால், ஈற்றில் யாம் நெஞ்சங் குழைந்துருகிப் பாடிய இரங்கற்பாக்களோ அனைவரையும் அகங் கரைந்து கண்ணீர் பெருகி அழுமாறு செய்து விட்டன. அதனால் நாயகரவர்களின் மாணவரும் நண்பரும் உறவினரும் பிறரு மெல்லாம் எமது காஞ்சியின் உருக்கத்தினை எங்குமே உயர்த்துப் பேசிப் பாராட்டலாயினர்."

—முகவுரை. சோமசுந்தரக் காஞ்சியாக்கம்.

இவ்வாறு அடிகளாரே அதற்கு முகவுரை எழுதியுள்ளாரெனின், அப்பாடல்கள் அவர் மெய்ம்மையுள்ளத்தில் எவ்வளவு உள்ளுணர்வு-

களைக் கிளர்வித்திருக்கும் என்பது, அப்பாடல்களை வாய்விட்டு இசைத்துப் பாடவல்லார்க்கே விளங்கா நிற்கும்.

காஞ்சியாக்கத்தின் ஓசை மிக்க அவலச் சுவை நிரம்பியதாக வும், சிறப்பாகவும் உள்ளது. மேனாட்டுப் புலவர்களின் Elegy என்னும் இரங்கற் பாடல்களுக்கு இணையாக இப்பாடல்கள் என் றென்றும் நின்று நிலவுந் தன்மையன. அதன் ஓரிரண்டு பாடல்களைக் காண்மின்கள் :

*சைவமெ னப்படு சமயந லுண்மை தழைந்துசெ ழித்திடவோ*
*தாவறு நீதிவ ழிப்படு வாதிகள் சார்ந்துக ளித்திடவோ*
*மெய்வழி பொய்வழி வேறுவே றுகவி ரிந்துவி ளங்கிடவோ*
*வேதவே தாந்தவ ரம்பினி யார்க்கும்வி ளங்கவி ளம்பிடவோ*
*தெய்வமி னிச்சிவ மென்றுதெ ளிந்துல கிங்குதி கழ்ந்திடவோ*
*திப்பிய மெய்யரு ளிப்புவி வந்துசி றந்ததி றம்படவோ*
*துய்யவெண் ணீறுது தைந்ததொ ழும்பர்க டன்மைசு*
*மந்திடவோ*
*சோமசுந் தரனெனு நாமமொ டிங்குநீ தோன்றிய தெங்குருவே!*

*வான்மதி மீனின நீங்கவ ழுக்கியிம் மண்ணிடை வீழ்ந்ததுவோ*
*மல்லலங் கற்பம ரஞ்சிவம் வீசியிம் மண்ணிடை வீழ்ந்ததுவோ*
*நான்முக னுன்மறை யுட்பொருள் கூறந லத்தக வந்ததுவோ*
*நல்லகல் லாலமர் நம்பர்கை காட்டுரை நாட்டவெ ழுந்ததுவோ*
*மான்மகள் நாமகள் தூமகள் கூடிவ ளந்தர வந்ததுவோ*
*மாதவ வாழ்வொடும் இல்வினை காட்டிட வள்ளுவர் வந்ததுவோ*
*சூன்முதிர் வண்புயல் நூன்முறை தந்துசு ரந்திட வந்ததுவோ*
*சோமசுந் தரனெனு நாமமொ டிங்குநீ தோன்றிய தெங்குருவே!*

*நாயினி ழிந்தவெம் புன்மைக ளைந்துந லந்தர வந்தனையோ?*
*நல்லது தீயது நன்றுப குத்துந வின்றிட வந்தனையோ?*
*தாயினும் என்னுயிர் தந்தையி னும்உயர் தன்மையில்*
*வந்தனையோ?*
........................................ ......................... ..........
*சோமசுந் தரனெனு நாமமொ டிங்குநீ தோன்றிய தெங்குருவே!*

—என்றெல்லாம் அவர் அழுங்குவதும், தம் குருவின் பிரிவாற்-றாமை தாளாது அரற்றுவதும், இப்பாடல்களின் ஒவ்வொரு சொல் லாகவும், சொல்லின் ஒன்றிய ஓசையாகவும், ஓசையில் துவன்ற ஓலமாகவும், ஓலத்துள் கலந்த உள்ளமாகவும், உள்ளத்துச் சுரந்த பத்திமையாகவும் வெளிப்பட்டு, இறுதியில் அவர்தம் புலமைப் பெற்றியைப் புலப்படுத்துகின்றன.

கையறு நிலையின் ஏழாம்பாட்டு, தம்மைத் துறந்த தம் குருவைக் 'கண்டினிரோ', 'கண்டினிரோ' என்று, குன்றிவிழிக் குயிலிடமும், கூம்புசிறைக் குருகிடமும், பொன் துகள் சிந்திடும் கொன்றைப் பூக்களிடமும் போய்க் கேட்டு நெஞ்சம் மருகுவது துன்புறும் அவரின் ஏழை உள்ளத்தை நன்கு புலப்படுத்துகின்றது. துன்பக் கடலுள் மூழ்கிய அவர்க்குக் குயிலும், குருகும், கொன்றையும் எவ்வளவு பற்றுக் கோடாகப் பட்டு, அவரின் துயரச் சுமையைத் தாங்குகின்றன! அவரின் இளமை சான்ற புலமையுள்ளத்தின் வளமைதான் என்னே!

அடிகளாரின் மலரினும் மென்மையான தூய்மையுள்ளம் -வாய்மையுள்ளம்-அறிவு கலந்த அன்பு செறிவுள்ளம் எவ்வாறு ஓலமிட்டுக் கலு ந்திரங்கியிருக்கும் என்பதை, இப்பாடல்களை ஒரு முறைக்குப் பல முறையும் பாடிப்பாடி உணரலாம். அவரின் செய்யுள் திறஞ்சான்ற புலமை செறிந்த வல்லுணர்வு என்ன என்பதை உணரலாம். செந்தமிழ் பழுநிய அவரின் தூய்தமிழ் நடையில் பழுது காணப் புறப்பட்டுள்ளனர், இக்கால் சிலர். அப்புல்லியர்தம் சொல் மிடைந்த புன்புலமைத் தீத்திறத்தின் மூன், இவ்வொண்டீந் தமிழ்ப் பாமணிகள் எவ்வாறு ஒளிவிட்டுக் கறங்குவன பாருங்கள்!

—(தொடரும்)

---

## தமிழ் இலக்கணத்தின் தழுவலே சமற்கிருத இலக்கணம்

எழுத்தின் முறை, பிறப்பு, உயிர்மெய்த் தனி வடிவம், மாத்திரை, கிளவி (பதம்), புணர்ச்சி ஆகியவற்றில், சமற்கிருத இலக்கணம் தமிழையே தழுவியுள்ளது. எழுத்தின் வரி வடிவம் கிருந்தம், நாகரி என்னும் இருவகையிலும் பெரும்பாலும் தமிழை ஒத்திருப்பது. கூர்ந்து நோக்குவார்க்குப் புலனாகும்.

பெயர், வினை, இடை என்னும் தமிழ்ப் பாகுபாட்டையே சமற்கிருதச் சொல்லிலக்கணமும் தழுவியுள்ளது. வேற்றுமைகள் இலத்தீனில் ஐந்து; கிரேக்கத்தில் ஆறு; சமற்கிருதத்தில் தமிழிற் போல் எட்டு. இதனால், வேற்றுமையமைப்பில், சமற்கிருதம் தமிழைப் பின்பற்றியதென்பது வெளிப்படை.

—பாவாணர், (தமிழர் மதம்)

(முன்னிதழ்த் தொடர்ச்சி)

# இனம் போன்று இனம் அல்லார்.

—தமிழவேள்.

அண்மைக் காலத்தில் தமிழ் நாட்டுக்கு வந்து தமிழ் கற்று வாழ்ந்த இத்தாலியரான 'சோசப்பெசுகி' என்னும் வீரமா முனிவரையும், ஆங்கிலேயரான 'சி. யு. போப்' என்னும் போப்பையரையும் போன்ற வெளிநாட்டுக்காரர், அகத்தியர். வீரமா முனிவரும், போப்பையரும் தமிழில் இலக்கண நூல்களை எழுதியதுபோல், ஒரு கால் அகத்தியரும் ஓர் இலக்கண நூலைத் தமிழில் இயற்றியிருக்கலாம். ஆனால் அந்த நூல்தான் தொல்காப்பியத்துக்கு முதல் நூல் என்று சொல்வது சரியா? அப்படிச் சொல்பவரைத் தமிழர் என்று கொள்ளலாமா?

தொல்காப்பியத்துக்கு முதன்நூல் அகத்தியம்தான் என்று சொல்வதற்குச் சான்று ஏதேனும் உண்டா? இல்லை. அகத்தியம் என்னும் நூலாவது இன்று இருக்கிறதா? அந்த நூலாசிரியரே கூறுவதுபோல், "அகத்தியம் என்ற இலக்கண நூலைப்பற்றி இப்போது நாம் கேள்விப்படுவதைத் தவிர அதிகமாக எதையும் தெரிந்து கொள்ள முடியவில்லை." அப்படியிருந்தும் அகத்தியம்தான் தொல்-காப்பியத்தின் முதல்நூல் என்று சொல்வதன் நோக்கம் என்ன? அந்த அகத்தியமும் வடமொழி இலக்கணம் என்னும் ஐந்திரவியாகரணத்தைப் பின்பற்றியது என்று கூறுவதன் கருத்து என்ன? தனித்தமிழ் முதல் நூல்களையெல்லாம் எப்படியேனும் வடமொழியின் வழிநூல்கள் என்று காட்ட வேண்டும் என்பது தானே!

காலஞ்சென்ற தமிழ் அறிஞர் கா. நமசிவாயர் அவர்கள் "அகத்தியர் ஆராய்ச்சி" என்றே ஒரு நூல் எழுதியிருக்கிறார். அந் நூலில் அவர் தொல்காப்பியர், அகத்தியரின் மாணாக்கர் அல்லர் என்பதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.

திரு. ந. சி. கந்தையா அவர்கள் "நமது மொழி" என்னும் நூலில் இந்த அகத்தியர் கதை நம்பத்தகாதது என்று கூறியிருக்கிறார். "தொல்காப்பியத்துக்குப் பனம்பாரனார் என்பவர் ஒரு சிறப்புப் பாயிரம் செய்துள்ளார். அது தொல்காப்பியம் எழுதப்பட்டு நீண்ட காலத்துக்குப்பின் செய்யப்பட்டது. தொல்காப்பியத்தைப்பற்றி அக் காலம் வழங்கிய செவிவழிக் கதைகளையெல்லாம் திரட்டி அப்-

பாயிரம் செய்யப்பட்டுள்ளது. அப்பாயிரத்துள் தொல்காப்பியர் அகத்தியரின் மாணவர் என்று கூறப்பட்டிருக்கவில்லை. ஆகவே அவர் அகத்தியரிடம் கல்வி பயின்றார் என்னும் வரலாறு நம்பத்தக்க தன்று."

திரு. மணி. திருநாவுக்கரசு அவர்கள் அகத்தியம் என்பது வட நூல் முறைமைக்கு ஒப்பச் செய்யப்பட்டது என்றால், தொல்காப்பியம் தமிழர் தம் பழைய இலக்கண முறையில் செய்யப்பட்டது என்கிறார்: "அகத்தியர் தமிழுக்கு இலக்கணம் வகுத்தார் என்பது இனி வருங் காலத்தில் தமிழ்ப்புலமை குன்றவரின் போப்பையர் இலக்கணம் படித்த ஒருவன் தமிழுக்கு இலக்கணம் வகுத்தார் போப்பையர் என்று கூறுதலை ஒக்கும். அகத்தியந்தானும் போப்பையர் தமிழ இலக்கணத்தை ஆங்கில முறைமைக்கு ஒப்பச் செய்தது போன்று வடநூல் முறைமைக்கு ஒப்பத் தமிழிற் செய்யப்பட்டதாகும். அதனானன்றோ அது தமிழ் மக்கள் தன்மைக்கு ஏலாததாய் இறந்தொழியத் தமிழர் தன்மைக்கு ஒத்த பழைய இலக்கண முறையிலேயே செய்யப்பட்ட தொல்காப்பியமே இன்றுவரை வழங்கலாயிற்று. அகத்தியர் தமிழ் இலக்கணம் செய்தார் என்பதனோடமையாது தமிழையே செய்தார் என்றும் வரலாற்று முறைமை அறியாத புலவர்கள் பாட்டாக நீட்டி விட்டார்கள்."

பேரா. திரு. ந. சுப்பு அவர்கள் தமது "தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை" என்னும் நூலில், அகத்தியம் தொல்காப்பியத்துக்கு முதல் நூலும் அன்று. தொல்காப்பியர் அகத்தியரின் மாணவரும் அல்லர் என்று அறிஞர் பலர் ஆராய்ந்து சான்றுகளுடன் நிறுவி யுள்ளதை நினைவூட்டுகிறார்: "அகத்தியனார் பெயரில் வழங்கும் நூற்பாக்களை நோக்குங்கால், அவை தொல்காப்பியனார் காலத்திற்கு மிகப் பிற்பட்ட காலத்தே இயற்றப் பெற்றனவாதல் வேண்டும் என்பது காய்தல் உவத்தல் இன்றி ஆராய்வார்க்குப் புலனாகும். இவற்றை அணுகி ஆராய்ந்த அறிஞர் பலர் இங்ஙனமே துணிந்திருக் கின்றனர். மேலும் இவர்கள் அகத்தியனாருக்குத் தொல்காப்பியர் மாணாக்கருமல்லர் என்றும் அகத்தியம் தொல்காப்பியத்துக்கு முதல் நூல் அன்றென்றும் தொல்காப்பியம் முதல் நூலே என்றும் சான்று களுடன் நிறுவியுள்ளனர்.'

திரு. செந்துறைமுத்து அவர்கள் "தொல்காப்பியர் வாழ்க்கை நெறி" என்னும் நூலில் ஐந்திரம் என்பதே தனித்தமிழ் இலக்கண நூலாகத்தான் இருக்க வேணடும் என்றும், வடமொழியின் பழைய இலக்கணமாகிய பாணினீயம் எழுதப்படுவதற்கு முன் எழுந்த தமிழ்

இலக்கண நூல் தொல்காப்பியம் என்றும் குறிப்பிடுகிறார். "ஐந்திரம் என்னும் நூலையாத்த இந்திரன் என்பவன் ஆரிய இனத்தின்பாற்பட்டவன் என்று சிலர் மொழிந்து வருகின்றனர். இதுவும் பொருந்தா உரையாகும். தொல்காப்பியருக்கு முன்பு இந்திரன் என்னும் புலவர் பெருமான் தமிழகத்தில் இருந்துள்ளார். அப்பெரு மகனாரால் யாக்கப் பெற்றது ஐந்திரம் என்னும் விழுமிய இலக்கண நூல். இந்நூல் தனித் தமிழ் இலக்கண நூல் என்பதை எவரும் மறுக்கவியலாது. இதற்குக் காரணம், ஆரிய மொழியில் மிகவும் பழமையான இலக்கண நூல் பாணினீ என்பதாகும். இப் பாணினீக்கு முன்னர் இலக்கண நூல் அம் மொழியில் இல்லை என்பது துணிவு. இப்பாணினீ என்னும் நூல் தொல்காப்பியத்துக்குப் பின்னர் தோன்றியதாகும். தொல்காப்பியம், வடமொழியில் இலக்கண நூல் எழுவதற்கு முன்னர்த் தோன்றிய முழு நூலாகும்." என்கிறார்.

இவர்களெல்லாம் இவ்வாறு சொல்லியிருக்க, மேலே குறிப்பிட்ட ஒரு நூலாசிரியர் மட்டும் வேறு வகையாகச் சொல்வானேன்? ஒரே நூலில் ஓரிடத்தில் அழுத்தமான மொழிப்பற்று உடையவர்போல் எழுதியவர் மற்றோர் இடத்தில் அகத்தியத்தின் வழி நூலே தொல்காப்பியம் என்பதுபோல் எழுதுவானேன்? "நட்டார்போல் நல்லவை சொல்லினும்" தமிழரோடு ஒட்டாதவர் அவர் என்பதைத்தானே அந்தக் கூற்று தெளிவுபடுத்துகிறது!

தமிழில் பல நெடுங்கதைகளை எழுதியுள்ள எழுத்தாளர் ஒருவர், சென்னையிலிருந்து வெளிவரும் ஒரு தமிழ்க்கிழமை இதழில், முன்பு ஒரு கட்டுரையை எழுதியிருந்தார்; அந்தக் கட்டுரையில் அவர் எழுதுகிறார்: "வடமொயில் மயூரம் என்றால் மயில் என்று பொருள். மயிலுக்கும் இவ்வூருக்கும் என்ன சம்மந்தம்? ஒரு சுவையான கதையைக் கேளுங்கள்" என்று தொடங்கி, 'மாயவரம்' எனத் தற்போது வழங்கும் ஊரிலுள்ள கோயிலைப்பற்றிய கதையைச் சொல்பவர்; "மயிலாய் நின்று தன் மணாளனை அவள் பூசித்ததால் அவருக்கும் 'மயூரநாதர்' என்ற ஓர் எழிற் பெயர் கிடைக்கிறது. அது வடமொழிப் பெயராய் இருப்பதால் தம் பக்தர்கள் சிலருக்குக் கோபம் வருமோ என்று அஞ்சிய அவர் அதைத் தூயதமிழில் மொழிபெயர்த்து, மயிலாடுதுறையார்' என்று வைத்துக் கொள்கிறார்' என்று முடிக்கிறார்.

'மயூரநாதர்' என்பது ஓர் எழிற்பெயராம் அப்பெயர் வடமொழியாக இருப்பதால் அன்பர்கள் சிலர் சினங் கொள்வார்களே என்று அஞ்சி 'மயூரநாதர்' என்னும் வடமொழிப் பெயரை 'மயிலாடுதுறையார்' என்று தமிழில் மொழிபெயர்த்து வைத்துக் கொள்கி-

ருராம்! அஃதாவது, 'முதலில் வடமொழிப் பெயர்தான் இருந்தது; பிறகுதான் து தமிழில் மொழி பெயர்க்கப் பட்டது' என்று அந்த எழுத்தாளர் துணிந்து ஒரு முழுப்பொய்யைச் சொல்கிருர்.

மயில்கள் வந்து ஆடும் துறையை உடைய ஊர் மயிலாடுதுறை என்பது. அந்த ஊரில் ஒரு கோயிலைக்கட்டி அந்தக் கோயிலில் வைத்து வணங்கும் சிலைக்கு மயிலாடுதுறையார் என்று பெயர் வைத்திருக்கிருர்கள். நெடுங்காலமாக மயிலாடுதுறை என்றே அழைக்கப்பட்டு வந்த பெயர், வடமொழியின் வல்லாண்மை மிகுந்த காலத்தில் 'மயூரவரம்' என்று வடமொழியில் மொழி பெயர்க்கப் பட்டிருக்கிறது. மயிலாடுதுறையார் என்பதும் 'மயூரநாதர்' என்று மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. அந்த வடமொழிப் பெயரே முதலில் வழங்கிய பெயர்போல் இருக்க வேண்டும் என்பதற்காகக் கூடவே ஒரு கதையும் கட்டிவிடப்பட்டிருக்கிறது. அந்தக் கதையை வைத்துக் கொண்டு, மயூரநாதர் என்னும் வடமொழிப் பெயர்தான் மயிலாடு துறையார் என மொழி பெயர்க்கப்பட்டது என்றும், அந்த மயிலாடு துறையார் இருப்பதனுல்தான் அந்த ஊருக்கு மயிலாடுதுறை என்று ஒரு பெயர் வந்தது என்றும் கூறுவது சரியா? அப்படிக் கூறுபவரைத் தமிழர் என்று கொள்ளலாமா?

மலஞ்சென்ற பேராசிரியர் இரா. பி. சேது அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்னரே ''தமிழகம்-ஊரும் பேரும்" என்று ஒரு நூல் எழுதியிருக்கிருர். அந்த நூலில் எவ்வாறு தனித் தமிழ்ப் பெயர்கள் எல்லாம் வடமொழிப் பெயர்களாக மாற்றப்பட்டன என்பதைத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிருர். அதில் அவர், 'மயிலாடு துறை' என்னும் தமிழ்ப் பெயர்தான் வடமொழியில் 'மயூரவரம்' (மாயவரம்) எனத் திரிக்கப்பட்டது என்பதைத் திட்டவட்டமாகக் கூறியிருக்கிருர். மயிலாடுதுறை என்னும் ஒரு பெயர் மட்டுமா வட மொழியில் திரிக்கப்பட்டது? இன்னும் எத்தனையோ பெயர்கள் திரிக்கப்பட்டிருக்கின்றன என்பதை அவர் விரிவாகக் கூறியிருக்கிருர். பழமலை என்று பொருள்படும் முதுகுன்றம் என்னும் அழகிய தமிழ்ப் பெயர்தான் 'விருதாசலம்' என்னும் வடமொழிப் பெயராக மாற்றப் பட்டது; புளியங்காடு என்னும் தமிழ்ப் பெயர்தான் 'திந்திருணிவனம்' (திண்டிவனம்) எனத் திரிக்கப்பட்டது; மறைக்காடு என்பதுதான் 'வேதாரண்யம்' என மாற்றப்பட்டது; ஐயாறு என்பதுதான் 'பஞ்ச நதம்' என்று பெயர் மாற்றப் பெற்றது; நாவற் கோயில்தான் 'சம்பு கேசுவரம்' ஆகியது; வெண்கோடுதான் தவளகிரி' ஆகியது, குடமூக்கு தான் 'கும்பகோணம்" ஆகியது—என்பன போன்ற பற்பல உண்மைகளை அவர் எடுத்துக் கூறியிருக்கிருர்.

தமிழ்ப் பெயர்களையெல்லாம் வடமொழியில் மொழி பெயர்த்தவர்கள் சில தமிழ்ச் சொற்களின் பொருளைச் சரிவரத் தெரிந்து கொள்ளாமல் தவருன மொழி பெயர்ப்புச் செய்திருப்பதையும் அவர் சுட்டிக்காட்டியிருக்கிருர். புதுக்கோட்டை குடுமியான்மலையைப்பற்றிச் சொல்கின்றபொழுது, "குடுமி என்பது குன்றின் சிகரம் (உச்சி); குன்றுடைய பெருமான் குடுமியான் எனப்பட்டார்; மலைக்குடுமியைத் தலைக்குடுமி எனப் பிறழ உணர்ந்த பிற்காலத்தோர் 'சிகாநாதர்' என்று அங்குள்ள ஈசனை அழைக்கலாயினர்"—என்கிருர். தொண்டை நாட்டுத் திருப்பிலவாயில் என்னும் ஊரைப்பற்றிச் சொல்லும்பொழுது, "பிலவாயிலூர் என்பதைப் புலிவாயிலூர் எனப் பிறழ உணர்ந்ததால் 'வியாக்ரபுரி' என்றும் வடமொழிப் பெயர் அமைந்தது" என்கிருர். "தேவாரம் பேற்ற 'திருத்தினைநகர்', தீர்த்தநகரி எனத் திரிந்தது" என்கிருர். "மல்லை என்று ஆழ்வார்த் திருப்பாக்களிலும் மாமல்லபுரம் என்று கல்வெட்டுகளிலும் குறிக்கப்படுகின்ற ஊர் 'மகாபலிபுரம், எனத் திரிக்கப்பெற்று, மகாபலி மன்னனேடு தொடர்புறுத்தப் பட்டுள்ளது" என்கிருர்.

இவற்றையெல்லாம் மேலே குறிப்பிட்ட எழுத்தாளர் அறியாதவர் அல்லர். அறிந்திருந்தும் தமிழ்நாட்டில் பெயர்கள் எல்லாம் முதலில் வடமொழியிலேயே இருந்தது போலவும், பின்னரே அவை தமிழில் மொழி பெயர்க்கப்பட்டன போலவும், 'தமிழ்ப் பெயர்களை விட வட மொழிப் பெயர்களே அழகாக இருப்பன போலவும் அவர் எழுது வானேன்? வடமொழியைத் தமிழ் மொழிக்கு அடிப்படையாகக் காட்டவேண்டும் என்ற விருப்பந்தானே? தமிழினும் வடமொழியே சிறந்தது என்று அவர் எண்ணிக் கொண்டிருக்கும் எண்ணம் தானே? "பல நல்ல கற்றக் கடைத்தும் மன நல்லர்" ஆகாதவர் அவர்" என்பதைத்தானே அவர்தம் எழுத்து புலப்படுத்துகிறது!

—(தொடரும்)


# "தென்மொழி" சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

| | உள்நாடு | கொழும்பு | வெளிநாடு |
|---|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் : | 12 உருபா | 15 உருபா | 20 உருபா. |
| அரையாண்டுக் கட்டணம்: | 6 உருபா | 7-50 | 10 உருபா. |
| தனியிதழ்: | 1 உருபா | 1-25 | 1-75 |

ஓரிதழுக்கு உருபா. 2 மேனி முன்பணம் கட்டக்கூடிய
விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

# மக்களவை

## 0: ம: ௨00. புதுச்சொற் புனைவும் பொருள் மயக்கமும்.

உயர்தமிழ்ப் பாவலரேறு பெருஞ்சித்திரனுர் அவர்களுக்குப் பொங்கல் வாழ்த்துகளும் வணக்கங்களும் படைக்கின்றேன்.

தென்மொழியில் சிங்கைச் செலவுக் கட்டுரையில் கிலோ மீட்டர் என்பதைக் குறிக்க "ஆயிரம் அளவடிகள்" என்று பயன்படுத்தியுள்ளீர்கள்.

பொறியியலில் மீட்டர் என்ற சொல்லைப் பல இடங்களில் பயன் படுத்த வேண்டியுள்ளது. மீட்டர் என்ற சொல் பெயர்ச் சொல்லாக வரும்போது மட்டும், ஒரு குறிப்பிட்ட நீளத்தைச் சுட்டுகின்றது. அளவு என்ற பொருளில் வேறுபல இடங்களில் பயன்படுகின்றது. [Isometric, tetrametric].

ஒரே இடத்தில் ஒப்புமையாகத் தனித்தனி நீளங்களைக் குறிக்கும் பல சொற்களை ஆள வேண்டியுள்ளது சான்ருக.

அடி = சாண் ($8\frac{1}{4}$ அங்குலம்) [தமிழ் நாட்டு அளவு]
அடி = 12 அங்குலம் [ஆங்கில நாட்டு அளவு]
மீட்டர் = ஏறத்தாழ $3\frac{1}{4}$ அடி (பிரான்சு நாட்டு அளவு]
கிலோ மீட்டர்—பெரிய நீளங்களைக் குறிக்க.
மைல் —

அண்மைக் காலம் வரை, தமிழ்நாட்டில் சாலை நீளங்களை 'மைலா'ல் அளந்தோம். தமிழ்நாட்டில் அதைக் கல் என்ருேம். இலங்கையில் அதையே கட்டை என்றனர். ஏனெனில் அங்கு 'மைல்' அளவுகள் கட்டைகளில் எழுதி நிறுத்தப்பட்டிருந்தன.

எனவே, சொற்பொருண்மை மொழியில் தெளிவாக அமைய 'மீட்டர்' என்னும் சொல்லுக்கு இணையான தனிச் சொல் இன்றியமை யாதது. பெயர்ச் சொல்லாதலின், தமிழ் மரபிற்கேற்ப இருப்பதால் அதை அவ்வாறே எடுத்துக் கொள்ளலாம். அல்லது புதிய பெயர் ஒன்று சூட்டி விடுங்கள். எல்லாரும் அதையே எடுத்து ஆண்டு கொள்ளட்டும்.

அளவடி என்பதில் வரும் 'அள' என்ற மூலத்தைச் செட்டாகப் பயன்படுத்த வேண்டுமென்று கருதுகிறேன். Measurements measure, mensuration, survey, metre guage, logic போன்ற எல்லா சொற்களுக்கும் 'அள' என்ற மூலம் தேவைப்படுகின்றது. இன்னும் ஏராளமான சொற்களும் உருவாக உள்ளன.

எனவே அருள்கூர்ந்து, தமிழில் பொருள் மயக்கம் தோன்றுமல் காக்கு முகத்தான் மீட்டர் என்பதற்கிணையான சொல் கூறிட வேண்டுகிறேன். அல்லது 'மீட்டர்' என்பதைத் தமிழில் ஏற்றிடும் வாய்ப்புகள்பற்றி ஆராய்ந்திட வேண்டுகிறேன்.

—கொடுமுடி-ச. சண்முகன்.
ஆசிரியர் 'கொங்கு' சென்னை-20.

*ஆசிரியர் குறிப்பு: அன்பரின் ஆர்வத்திற்கு நன்றி. தூய தமிழ் வளர்ச்சி தமிழரின் ஒருமுகமான உணர்ச்சியையும் ஊக்கத்தையும் பொறுத்தது. தமிழ் மொழியையும் எழுத்தையும் அவரவர் விருப்பத் திற்குத் தகுந்தவாறு கையாளும் முறையே, தூய தமிழ் வளர்ச்சியை இதுகாறும் தடைப்படுத்தி வருகின்றது. ஓரளவு தமிழ் கற்றவர்களும், தம் தம் பிறதுறை அறிவே தமக்குள்ள தகுதியாகக் கொண்டு, தமிழ் மொழியையும், எழுத்தையும் திருத்துகின்ற குறும்புத் தனங்களை முதற்கண் விட்டொழித்தல் வேண்டும். மொழியறிவு வேறு, மொழிப் புலமை வேறு என்றறியாத சிலர் இக்கால் மொழியாராச்சியும் எழுத்துச் சீர் திருத்தமும் மேற்கொண்டு, மெய்யான தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பெரிதும் தடையாயிருந்து, மக்களிடையே குழப்பத்தை விளைவித்து வருகின்றனர். (மொழிப் புலமை கடற்கரையில் நின்று குளிப்பதைப் போன்றது. மொழியாராய்ச்சி அக் கடலில் மூழ்கி முத்து எடுப்பதைப் போன்றது.) எனவே மெய்யான தமிழ் வளர்ச்சிக்கு இரு முனைகளிலும் போராட வேண்டியுள்ளது. இப் போராட்டத்திற் கிடையில், பொதுமக்களுக்கும் ஓரளவு எளிதே விளங்குகின்ற வெளிப் படையான தூய தமிழ் ஆக்கங்களையே தென்மொழி மேற்கொண்டு வருகின்றது. காலத்தேவையையும், இடத்தேவையையும், ஆர்வத்தை யும் பொறுத்து, இனிப் படிப் படியான சொல்லாக்கங்களைத் தென்மொழி அவ்வப்பொழுது வெளிப்படுத்தி வரும். அதுவரை கலப்புத்தமிழ்க் காதலர்களுக்குக் கலக்கமும் குழப்பமும் தோன்றாத வகையில் வெளிப்படையாகப் பொருள் தெரியும் சொற்களையே முதற்படியாகப் பயன்படுத்தி வருகின்றோம். உண்மையைப் பின்பற்றிக் கொள்ளும் நேர்மையான போக்குகள் வளரத் தொடங்குமானுல்*

இவ்வகையில் பல நல்ல விளைவுகள் தோன்றும். ஆனால், அதற்குள் தாம் தாம் கொண்ட கொள்கைகளையே சரியென்று நிலை நிறுத்த விரும்பும் பதற்றக் காரர்கள் சிலர், ஏதோ பட்டணமே பறிபோவது போல் துடிதுடிப்பாகவும், விரைவு விரைவாகவும் தங்களுக் கென்று வாய்த்த ஓரிரு வெளியீடுகளில் தங்களைப் பேரறிஞர்களாக அறிமுகப் படுத்தி, நிலைபடுத்திக் கொள்ள முயன்று வருவது, அடிப்படையில் ஏற்பட்டு வரும் சில நல்லுணர்வுகளையும் தீய்ந்து விடும் போல் தெரிகின்றது! இவற்றால்தான் தென்மொழி புதுச்சொல் புனைவில் சில விடத்து ஆழத்தைக் கொள்ளாமல் அகலத்தைக் கைக்கொள்ள வேண்டியதாகின்றது. தேவையும், ஊக்கமும் மிகுகின்ற பொழுது, அகலம் ஆழமாக நெடுநேரமாகாது.

இனி, மீட்டர் என்னும் இற்றை மேலையாரிய ஆங்கிலச் சொல் மாத்திரை என்னும் தமிழ்ச் சொல்லினின்றும் திரிக்கப் பெற்றதே. இதற்கு வரலாறு உண்டு. (பாவாணர், மீட்டரை மாத்திரி என்பார்.)

மாத்திரை-அளவு - இது கிரேக்கத்தில் Metron என்றும் இலத்தீனில் Meter என்றும் திரியும். இதுவே ஆங்கிலத்தில் மீட்டர் என்று வழங்குகின்றது. (மொழிப் பேரறிஞர் பாவாணரின் '(The Primary Classical Language of the World'. 'வடமொழி வரலாறு' என்னும் நூல்களைப் பார்க்க.)

இவ்வடிப்படைகளை உணராதார் தமிழே திரவிடத்திற்குத் தாயும் உலக மொழிகட்கு மூலமும் என்னும் உயரிய வரலாற்று ஆய்வுக் கொள்கையை ஒப்புக் கொள்ளத் தயங்குகின்றனர். அதனால் சில மயக்க நிலைகள் இக்கால் உலவுவது இயற்கையே! இனி, புலமை மிக்க தமிழ்ப் பேராசிரியர்கள் சிலர், தமிழில் உள்ள சில இலக்கிய இலக்கண நூற்களைக் கற்ற மட்டிலேயே, தம்மைப் பெரிய மொழி நூலாராய்ச்சியாளர்களாகக் கருதிக் கொண்டு, உடனே மொழியை யும் எழுத்தையும் திருத்த முற்பட்டு விடுகின்றனர். மேனாட்டில் எத் துறையில் எவ்வளவு கற்ற அறிஞர்களும் அவ்வத் துறைகளிலேயே நின்று, தம் தம் அறிவுநிலைகளைப் புலப்படுத்துவதைப் பார்க்கலாம். இங்கோ, ஒருவர் ஒரு துறையில், ஏதோ ஒரு வகையில் புலமை பெற்று விட்டாலோ, கழுதை கண்டதிலும் வாய்வைக்க முந்துவதைப் போல், எல்லாத் துறைகளிலும் தம்மை முற்படுத்திக் கொண்டு கருத்தறிவிப்பது, பெரிதும் வருந்தத் தக்கதாயிருப்பதுடன், தமிழ் வளர்ச்சிக்கு மட்டுமின்றித் தமிழன் முன்னேற்றத்திற்கும் பெருந்தடை யாக விருக்கின்றது.

மற்றும், இங்கு ஓரிரு தாளிகையாசிரியர்கள் தவிர, பிறர் தமிழர் முன்னேற்றத்திலும் தமிழ் வளர்ச்சியிலும் யாவரினும் மிகுந்த நாட்டங் கொண்டவர்போல் எழுதினாலும் பேசினாலும், தாம் தாம் நடத்தும் தாளிகைகளில், தூயதமிழைப் பயன்படுத்தும் வகையில், தூயவுள்ளமும் துணிவும் கொண்டவர்களாக இருப்பதில்லை. அவ்வாறு இன்றி, உண்மை உணர்ந்து, அனைவரும் ஒருமுகப்பட்டு, அவரவர் அறிவின் திறந்தெரிந்து கொண்டு, அவ்வவ்வளவில் நின்று, தமிழையும் தமிழரையும் காக்கும் காலம் வரும்வரை, தென்மொழி போலும் ஓரிரண்டு இதழ்கள், தங்கள் வழிகளிலேயே நின்று, அமைதியான தொரு மாற்றத்தை உருவாக்கி வரும் என்பதிலும், அதில் பல முழுமையற்ற ஆக்கங்கள் இல்லாமலிருப்பதிலும், குறையேதும் நேர்ந்து விடவில்லை என்பதுவே நம் கருத்தாகும்.

இனி, மடலெழுதிய அன்பர் அவர்கள் விரும்புவதுபோல், 'மீட்டர்' என்னும் சொல்லுக்கு, மாத்திரை என்னும் சொல்லையே, முழுமையாகவோ, முன் பின்னாகவோ கொண்டு, எல்லா நிலைகளுக்கும் பொருந்தும் வகையில் ஒரு சொல்லை உருவாக்கிக் கொள்வதும் நல்லதே. ஆனால் அம்முயற்சி இவ்வகையில் ஓர் ஒருமுக உணர்வு ஏற்பட்டு, அரசுத்துணையும் கைவந்து, முற்ற முடிந்த விளைவாக உருவாகும் நேரத்தில் செய்யப்படுவதாகும். அதுவரைக் கலப்புச் சொல்லைவிட ஏதோ ஒரு வகையில் பொருத்தமான பொருளாக்கச் சொல் ஆயிரம் மடங்கு சிறந்ததே ஆகும்.

—பெருஞ்சித்திரன்.

## செந்தமிழ் நூல் வெளியீட்டுக் கூட்டுறவுக் கழகம்.

செந்தமிழ் நூல் வெளியீட்டுக் கூட்டுறவுக் கழகத்தில் சேர்வதற்கு விளக்கம் வேண்டியும், பங்குகள் கேட்டும் அன்பர் பலரிடமிருந்தும் மடல்கள் வந்து கொண்டிருக்கின்றன. இக் கூட்டுறவுக் கழகத்திற்கான அடிப்படை ஆக்க முயற்சிகளும், சட்ட நெறிமுறை வரைவுகளும், பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளும் முறைப்படி மேற்கொள்ளப் பெற்று வருகின்றன. அதன்பின் விரிவான அறிக்கைகள் வெளியிடப் பெறும். அதற்குள் தங்கள் பங்குத் தொகையினை விடுக்க விரும்பும் அன்பர்கள், தாம் எடுத்துக்கொள்ள விரும்பும் பங்குகளுக்கான தொகையுடன் சேர்ப்புக் கட்டணம் ஓர் உருபாவும் சேர்த்துத் தம் முழு முகவரியுடனும் விளக்கத்துடனும் 'தென்மொழி' சென்னை-5 என்னும் முகவரிக்கே விடுத்து வைக்கவும். ஒரு பங்கு ஓர் உருபா. ஒருவர் எத்தனைப் பங்குகள் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். தேவையான பங்குகள் விரைந்து நிறைவாகி வருகின்றமையால் அன்பர்கள் முந்திக் கொள்வது நல்லது.

25—9—74
சென்னை-5.

பெருஞ்சித்திரன்.
அமைப்பாளர்.

தொடர்: 5

நான் இருக்கையிலமர்ந்த சில நொடிகளுக்குப் பின், வானூர்தி ஒலிபெருக்கியில் ஓர் அறிவிப்பு வந்தது. 'ஊர்தி சிங்கப்பூரை நெருங்கிக் கொண்டிருக்கின்றது என்றும், இன்னும் ஓர் அரைமணி நேரத்தில் அது சிங்கப்பூர் அனைத்துலக வானூர்தி நிலையத்தில் இறங்குமென்றும், வழிப்போக்கர்கள் தங்கள் தங்கள் இருக்கைகளிலேயே அமர்ந்திருக்க வேண்டுமென்றும, அனைவரும் தங்கள் இடைவாரை மிக நன்றாக இறுக்கிக் கட்டிக் கொள்ள வேண்டுமென்றும், ஏதும் அச்சப்படத் தேவையில்லை'யென்றும் கூறியதுடன், வானூர்தித் தலைவர், அனைவர்க்கும் வாழ்த்துக் கூறுவதாகவும் தெரிவிக்கப் பெற்றது.

வானூர்தி நடைமுறைகள் எனக்கு மிகவும் பிடித்திருந்தன. கனிவும் கவனிப்பும் நிறைந்த பணிவிடைகளும், ஏந்துகள் நிறைந்த உளளமைப்புகளும் என்னை மிகவும் கவர்ந்தன. பணியாளர்களின் அன்பும் அழகும் புன்சிரிபபும் தவழுகின்ற முகங்கள் அந்த நான்கு மணிப் பொழுதில் உலகக் கவலைகள் அனைத்தையும் மறக்கச் செய்தன. அதுவும் சிங்கப்பூர் வானூர்தியில் (SIA) வழிப்

நிலையில், தன் கணவரையும் குழந்தையையும் சென்னைக்கு அனுப்பியிருந்தாள். அவர்கள் அனைவரும் இந்நேரம் சென்னையை விட்டுப் புறப்பட்டுப் பேரியங்கியில் கடலூருக்குச் சென்று கொண்டிருப்பார்கள், அதற்குள் நாம் சிங்கை வந்து விட்டோமே என்று வியப்புடன், இருக்கையை விட்டு எழ அணியமாக விருந்தேன். இறுதியில் வானூர்தி தரையில் படுகின்ற ஓர் அசைவு உணரப் பெற்றது. அதைத் தொடர்ந்து சக்கரங்கள் தரையில் தோய்ந்து உராய்கின்ற ஒலி உணரப் பெற்றது. பின் ஊர்தி நெடுந்தொலைவு தரையில் ஓடிநின்றது. அதுதான் பாய லேபர் (Paya Lebar) என்னும் சிங்கப்பூரின் அனைத்துலக வானூர்தி நிலையமாகும்.

## 1. வானூர்தி நிலைய வரவேற்பும் அன்பர்கள் மகிழ்ச்சியும்.

சிங்கை, பாயலேபர் வானூர்தி நிலையம் மிகவும் அழகுடன் சிறந்த முறையில், அண்மைக்கால அறிவியல் முறைப்படி அமைக்கப் பெற்ற பெரிய நிலையமாகும். உலக முழுவதிலும் தொடர்புள்ள முப்பது வானூர்தித் தடங்கள் அந்த பாயலேபர் வா ர்தி நிலையத்தின் வழியாகச் செல்லுகின்றன. நகரிலிருந்து வடகிழக்காக ஏழரைக் கல் தொலைவில் அமைந்திருக்கின்ற அந் நிலையம், 700 குறுக்கங்கள (ஏகர்) பரப்பளவுள்ள நிலத்தை அளாவியிருந்தது. அந் நிலையத்தின் ஒட்டப் பாதை 13,200 அடி நீளங் கொண்டதாக இருப்பதாகவும், ஆசியாவிலேயே இது நீண்ட ஒட்டப் பாதை உள்ள நிலையம் என்றும் அறிந்து கொண்டேன். உலகில் உள்ள ஐந்து கண்டங்களில் உள்ள பெரிய நாடுகள் அனைத்தையும் சார்ந்த வானூர்திகள் எல்லாம் இங்கு வந்துபோய்க் கொண்டிருக்கின்றன.

சிங்கையின் பழைய காலாங் வானூர்தி நிலையம் 1955 வரை பயன்படுத்தப்பட்டு வந்தது. அதன் போக்குவரத்து ஏந்துகளை நிறைவு செய்வதற்காக, இந் நிலையம் கட்டி முடிக்கப் பெற்று 1955 ஆகஃச்டு 20-ஆம் பக்கலிலிருந்து இயங்குகின்றதாகத் தெரிவித்தார்கள். இந்நிலையம் ஐந்து அடுக்குகள் கொண்ட அழகிய கட்டடங்கள் கொண்டது. உலகின் மிகப் புதுமையான முறையில் அமைந்தவை அவை. வழிப்போக்கர்கள் தங்கும் அறைகள், பெரிய சிறந்த கடைகள், அஞ்சல், தொலைவரியகங்கள், செய்தித் தொடர்பு

அலுவலகம், உண்டிச்சாலை, மதுக்கடைகள், வரியில்லாமல் விலை போக்கும் பன்னாட்டுப் பொருள்களும் நிறைந்த பெரிய விற்பனை நிலையங்கள், ஒதுக்கிடங்கள், முற்றிலும் புதிய முறையிலமைந்த குளியலறைகள், மருத்துவ உதவிமனைகள் முதலிய அனைத்து ஏந்து களுடனும் விளங்கும் அந் நிலையம மிக்க அழகாகவும் தூய்மை யாகவும பராமரிக்கப் பெற்று வருவது மிகவும் வியப்பளிப்பதாகும். நம் சென்னை நகரின் வானூர்தி நிலையம் இங்குள்ள சிறிய ஒரு புகை வண்டி நிலையம் போன்றதென்றால், சிங்கை அனைத்துலக வானொலி நிலையம் சென்னைத் தொடர்வண்டி நடுநிலையம் (Madras Central Station) போன்றது. பெரிய பேரியங்கி நிலையம்போல், எப்பொழுதும் ஏதோ ஒரு திசையிலிருந்து வானூர்திகள் பேரிரைச்சலுடன் வந்து கொண்டிருப்பதும் போய்க் கொண்டிருப்பதும், சிங்கப்பூரில் தவிர்க்க முடியாத ஓர் ஒலிக் காட்சியாகும்.

வானூர்தி இந்நிலையத்தில் வந்து நின்றதும் அனைவரும் இறங்கினோம். வானூர்திப் பணியாளர்கள் ஆண்களும் பெண்களு மாக ஊர்தியின் இறங்கு வழியில் நின்று கொண்டு, மிக்க மகிழ்ச்சி நிரம்பிய முகங்களுடன் எங்களுக்கு வாழ்த்துக் கூறி விடை தந்தார்கள். அதன்பின் பேரியங்கி ஒன்று வந்து எங்களை நிலை யத்தின் கட்டட வாயிலுக்கு ஏற்றிச் சென்றது. வானூர்திக் கட்டடம் முழுவதும் வளிநிலைப்பாடு (Air-condition) செய்யப் பெற்றி ருந்தது. உள்ளே நுழைந்து படிக்கட்டுகளில் ஏறினேன். பொது மக்கள் தங்கும் பகுதியில் பேரளவில் கூட்டம் நிறைந்திருந்தது. வழிப்போக்கர்களை வரவேற்க அவர்கள் காத்திருந்தார்கள் போலும்! நானும் மிகுந்த ஆவலுடன் கூட்டத்தை நோக்கினேன். என்னைக் கண்டு கொண்டதும் கூட்டத்தின் முன் பகுதியிலிருந்து பலகைகள் உயரே நீண்டு அசைந்து என்னை வரவேற்றன. அக் கைகளுக்குரிய அனைவரின் முகங்களிலும் மகிழ்ச்சியும் ஆரவாரமும் பூரிப்பும் நிறைந்திருந்தன. அவர்களுக்கிடையில் நீண்டுயர்ந்து நின்ற முல்லைவாணனின் உருவம் மட்டும் எனக்குச் சட்டென்று புலப் பட்டது. உடனே அவரைச் சார்ந்த அக்கூட்டம் எனக்கே உரிய கூட்டம் என்பதைக் கண்டு கொண்டு, நானும் மகிழ்ச்சி பொங்க என் கைகளை மேலே உயர்த்தி அசைத்து, அவர்களின் அன்பு வர வற்பை ஏற்றுக் கொண்டதாகத் தெரிவித்தேன்.

(—தொடரும்)

# பாவலர் பெருஞ்சித்திரனாரின் பாடல் தொகுப்பு (கனிச்சாறு)

## வெளியீட்டுக்குழு அறிக்கை!

அருந்தமிழன்பரீர்!

அன்பின் அகம் கனிந்த கைகூப்பு.

மொழிக்குள்ள அனைத்துச் சிறப்பியல்புகளும் பெற்றுள்ள உலகின் சில மொழிகளில், தமிழ்மொழி தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். இத்தகு சிறப்பு வாய்ந்த ஒண்டீந் தமிழில் கழகக் காலத்தில் புலவர் பெருமக்கள் தமிழர்களின் நாகரிகத்தையும் பண்பாட்டையும் விளக்கும் பாடல்களைப் படைத்துள்ளனர். இவ்விருபதாம் நூற்றுண்டில் தோன்றிய புலவர்களில் பாவேந்தர் பாரதிதாசனார் தனிச் சிறப்புப் பெறுகின்றார். அவருக்குப்பின் அவரிடத்தை நிறைவு செய்து, நம் பைந்தமிழ்ப் பாவலர் பெருஞ்சித்திரனார் அவர்கள் தமக்கே உரித்தான செந்தமிழ் நடையில் பல ஆண்டுகளாக ஆயிரக் கணக்கான பாடல்களை எழுதித் தென்மொழியில் வெளியிட்டுள்ளதைத் தமிழன்பர்கள் நன்கு அறிவர். அவருடைய ஆசிரிய வுரைகளோடு, செம்மாந்த பாடல்களும் தமிழர்கட்குப் புத்துணர்ச்சியும் எழுச்சியும் ஊட்டியுள்ளன. தமிழ்மொழி, தமிழக விடுதலை, குமுகாயச் சீர்திருத்தம் ஆகியவைபற்றிப் பாவலர் இயற்றியுள்ள பாடல்கள் ஆயிரக் கணக்கான அன்பர்களைத் தட்டியெழுப்பி வீறு பெறச் செய்துள்ளன. தென்மொழியின் முகப்புப் பாடல்களால் ஈர்க்கப்படாதார் எவரும் இல்லை எனலாம்.

"பெருஞ்சித்திரனார் செய்யுட் செய்வதிற் போன்றே புதுக்கதைப் புனைவிலும் தேர்ச்சி பெற்றிருப்பது பாராட்டத் தக்கது. குல, மத, கட்சிச் சார்பின்றித் தமிழாக்கம் ஒன்றையே கருதும் சான்றோர், பிற்காலத்துப் பெரும் பாவேந்தராதற் கேற்ற இவ் விளம் பாவலரை பெரிதும் ஊக்கக் கடவர்" என, இருபது ஆண்டுகட்கு முன்னரே மொழிநூல் மூதறிஞர். ஞா. தேவநேயப்பாவாணராலும்,

*"கள்ளம் எப்படி அப்படிக் கடுகள்வும் இலாதநெஞ் சினார்முக்*
*கனிகள் எப்படி அப்படிப் போன்றமுத் தமிழின்மே லன்பர்*
*குள்ளம் எப்படி அப்படி இலாப்பெருங் கொள்கை யுடையார்*
*குரைகடல் எப்படி அப்படிக் குணநிறை துரைமா ணிக்கனார்*
*வெள்ளம் எப்படி அப்படிச் செந்தமிழ்ச் சொற்பெருக் கேற*
*மேன்மை எப்படி அப்படிப் பட்டதோர் நடையிற்றம் நல்ல*
*உள்ளம் எப்படி அப்படித் தந்ததோர் உயர்தமிழ் நூல்தான்*
*உலகம் எப்படி அப்படி நிலைகொள் கொய்யாக் கனியே!"*

எனக் கொய்யாக்கனி மதிப்புரையில் புரட்சிப் பாவலர் பாரதிதாசனாராலும் பாராட்டப் பெற்றவருமான பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் தனிப்பாடல்கள் அனைத்தும் தொகுக்கப் பெற்றுத் தனி நூலாக வெளிவருவது இன்றைய சூழ்நிலையில் மிகவும் இன்றியமையாத ஒரு பணி ஆகும்.

நூல் ஐநூறு பக்கங்களுக்குள் அடங்குமென்றும், நூலின் விலை பத்து உருபாவுக்கு மேல் பதினைந்து உருபாவுக்குள் அடங்கக் கூடுமென்றும், நூலை அச்சிடப் பத்தாயிரம் உருபா செலவாகும் என்றும் தோராயமாகத் மதிப்பிடப் பெற்றுள்ளது. தாள்விலை மிக்குள்ள இக்காலத்தில் ஒரிருவர் இந்நூலை வெளியிடுதல் கடினம். எனவேதான் இத் தொகுப்பு நூலை வெளியிட உண்மைத் தமிழன்பர்களின் உதவி வேண்டப் படுகின்றது. அஃதாவது நூலை அச்சிடப் பத்து உருபா முன்பணமாக அனுப்பக் கூடிய ஆயிரம் தமிழன்பர்கள் தொக வேண்டும். விரைவில் தொகை சேர்ந்தால்தான் நூலை உடனே வெளியிட இயலும். பத்து அன்பர்களிடமும் அதற்கு மேலும் பணம் தண்டி அனுப்பும் அன்பர்களுக்கு எங்கள் செலவில் நூல்கள் அனுப்பப் பெறுவதுடன், அவர்கள் முயற்சியும் பாராட்டப் பெறும். குறிக்கப் பெற்ற நூலின் விலை பின்னர் மிகுமாயின் எச்சத் தொகை முன்பணமனுப்பிய அன்பர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப் பெறும்.

எனவே, நம் முன்னோரைத் தக்காரும் மிக்காருமாகத் தெள்ளத் தெளியக் காட்டுவதும், நாம் மானத்தோடு வாழ்ந்து ஏறுபோல் பீடுநடை நடக்கச் செய்வதும், விடுதலை உணர்வைத் தட்டியெழுப்பி வீறுபெறச் செய்ய ஏதுவாயிருப்பதுமான இத் தொகுப்பு நூல் வெளியீட்டிற்கு, மாணுக்கரும் ஆசிரியர்களும் தமிழன்பர்களும் பொதுமக்களும், உலகத் தமிழ்க் கழகக் கிளைகளும், ஏனைய தமிழ் மன்றங்களும், தனித்தும் தொகுத்தும் தொகையைப் பணவிடை மூலம் கீழே குறிக்கப் பெறும் முகவரிக்கு அனுப்பி, அன்னைத் தமிழின் தொன்மைப் புகழினை என்றும் நின்று நிலவச் செய்யும் அருந்தொண்டிற்கு உறுதுணையாகப் பல்லாற்ருனும் உதவுமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம்.

இன்ன வண்ணம்,

1. மறை. நித்தலின்பன், கோவை
2. ப. துரையரசன், அவிநாசி
3. கா. இளமுருகன், பு. புளியம்பட்டி
4. தமிழப்பன், திருப்பூர்
5. முத்துக்குமரன், பல்லடம்
6. இளமாறன், நீலமலை.
7. தமிழவேள், பழங்கரை.

பணமனுப்ப வேண்டிய முகவரி:

புலவர். கா. இளமுருகன், எம்.ஏ., டி.ஆர்.எசு; பி.தி.,
"மணிவாசகர் இல்லம்"
1/94, நம்பியூர்ப் பாதை,
புன்செய்ப் புளியம்பட்டி அஞ்சல் (638452)
கோவை மாவட்டம்.

# செய்திகள்.

## 1. திருத்தவத்துறை, திருவள்ளுவர் கழக ஆண்டு விழா.

நிகழும், தி. பி. 2006, சுறவம் 1-ஆம் நாள் (14-1-75) அன்று, திருச்சி, திருத்தவத்துறை (இலால்குடி)யில், திருவள்ளுவர் கழக ஆண்டு விழா நடைபெற்றது. அதன் முதல் நாள் நிகழ்ச்சி சட்ட மன்ற உறுப்பினர் திரு. வெ. ந. முத்தமிழ்ச் செல்வன் அவர்கள் தலைமையில் நடந்தது. வரவேற்புரையைப் புலவர் திரு. மொ. பழநி மாணிக்கம் நிகழ்த்தினார். ஆசிரியர் திரு பெருஞ்சித்திரனார் 'தமிழ நெறி' என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். நன்றியுரை திரு. இலா. ரா. சிதம்பரம் அவர்களால் நிகழ்த்தப் பெற்றது.

## 2. அ. பள்ளிபட்டி உ.த.க. தொடக்க விழா.

நடைபெறும் தி. பி. உ௰௦௬, சுறவம் 4-ஆம் பக்கல் (17-1-75) அன்று மாலை, தகடூர் மாவட்டம், அரூர், அ. பள்ளிபட்டியில், உ.த.க. தொடக்க விழாக் கூட்டம் நடந்தது. நிகழ்ச்சிக்குத் தென்மொழி மறவர். வீ. அரசங்கோவன் (இராசகோபால்) க.மு.ஆ.ப., அவர்கள் தலைமை தாங்கினார். கூட்டத் தொடக்கத்தில் நீலமலை திரு. இளமாறன், உ த.க. கொள்கைப் பாடல்களையும் விடுதலைப் பாடல்களையும் பாடினார். அதன்பின், அரூர் நடேசா ஊழிய நிலைய உரிமையாளர், திரு. அ. சாமிக்கண்ணு, மெணசி, தமிழ்மணி ஆகியோர், கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர். இறுதியில் ஆசிரியர் திரு. பெருஞ்சித்திரனார் உ.த.க.வைத் தொடக்கி வைத்து நீண்டதோர் உரையாற்றினார்கள். கூட்டத்திற்கு அண்டை அயலூரிலுள்ள ஆசிரியப் பெருமக்களும், இளைஞர்களும், ஊர்ப் பெரியவர்களும், பொதுமக்களும் வந்திருந்து சிறப்புச் செய்தனர். கூட்டத்தை அ. பள்ளிப்பட்டி மளிகை வாணிகர் திரு. மேழி வளவன் ஏற்பாடு செய்திருந்தார். இறுதியில் திரு. ப. சிவலிங்கம் நன்றி நவின்றார்.

## 3. கோவை, ஆலாந்துறை முத்தமிழ் விழா.

தி. பி. 2006 சுறவம் 6-ஆம் நாள் (19-1-75) அன்று, கோவை, ஆலாந்துறையில் முத்தமிழ் விழா நடந்தது. காலை நிகழ்ச்சியில், கோவை, பிராமணியம் ஆசிரியர் திரு. சதாசிவம் அவர்கள் தலைமையேற்றார். திரு. மறை. நித்தலின்பனார் அவர்களும் ஆசிரியர், பெருஞ்சித்திரனார் அவர்களும் கலந்து கொண்டு சிறப்புச் சொற்பொழிவாற்றினர். பிற்பகல் நிகழ்ச்சியாகப் பட்டி மன்றமும் நாடகமும் சிறப்புற நடந்தேறின. கூட்டத்தை ஆலாந்துறை தமிழ் வளர்ச்சிக் கழகத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

## 4. கோவை, சூலூர், நக்கீரர் தமிழ்மன்ற விழா

கடந்த தி. பி. 2006, சுறவம் 6-ஆம் பக்கல் (19-1-75) அன்று மாலை, கோவை, சூலூரில் நக்கீரர் தமிழ் மன்றத்தின் 5-ஆம் ஆண்டு நிறைவு விழா நடந்தது. கூட்டத்தின் முதல் நிகழ்ச்சியாக, பெரியார் ஈ. வே. இரா., அறிஞர் அண்ணு, மொழி நூலறிஞர் பாவாணர், பாவேந்தர் பாரதிதாசன் ஆகியோர் படத்திறப்பு விழா நடந்தது. அந் நிகழ்ச்சிக்கு ஊராட்சி மன்றத் தலைவர் திரு சூ. ர. சுப்பிர மணியம் தலைமையேற்ருர். இறுதி நிகழ்ச்சியாகத் தென்மொழி யாசிரியர் பாவலரேறு பெருஞ்சித்திரனுர் 'பெருமைத் தமிழும் சிறுமைத் தமிழரும்' என்னுந் தலைபபில் அரியதொரு சிறப்புரை யாற்றினுர். கூட்டம் பேரளவில் கூடியிருந்தது குறிப்பிடத் தக்கது. அந் நிகழ்ச்சியைத் தொடர்ந்து, இரவு 8-30 மணியளவில், பாவலர் பெருஞ்சித்திரனுர் அவர்களை நடுவராகக் கொண்டு, 'தமிழினத்தின் ஒற்றுமைக்கும் எழுச்சிக்கும் பெரிதும் தடையாய் அமைவது, அகப்பகையா, புறப்பகையா?' என்னுந் தலைப்பில் பட்டி மன்றம் நடந்தது. அகைப்பகையே என்பதை வலியுறுத்தி, திருவாளர்கள் விடுதலைவிரும்பி, க. இ., புலவர். இராசி யண்ணன், அருணு அரசகோ, வே. மு. அவர்களும், புறப் பகையே என்பதை வலியுறுத்தி, திருவாளர்கள் இறையன் க.இ., ஆ. ப., கந்தசாமி, க. மு., முத்து இராமலிங்கம் க. மு. அவர் களும் தருக்கமிட்டார்கள். பட்டிமன்றம் இரவு 12-30 வரை நடந்தும், மக்கள் சிறிதும் கலையாமல் ஆர்வத்துடன் கேட்டிருந்தது குறிப்பிடத் தக்கது. இறுதியில் தலைப்புகளை விளக்கி நடுவர் அவர்கள், "அகப் பகையே" என்று தீர்ப்பு வழங்கினுர்.

## 5. கோவை, பல்லடம் அ.உ.பள்ளி இலக்கிய மன்றக் கூட்டம்.

கடந்த 20-1-75 காலை, பல்லடம் உயர்நிலைப்பள்ளி மாணவர் இலக்கிய மன்றச் சிறப்புக் கூட்டம் திரு. சு. க. இராமசாமி, க.இ.ப.இ. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் ஆசிரியர் பெருஞ்சித்திரனுர் அவர்கள் கலந்து கொண்டு 'இலக்கியப் பயன்' என்னுந் தலைப்பில் அரியதோர் உரை யாற்றினுர். திரு. நித்தலின்பனுர் அவர்களும் இலக்கியவுரை யாற்றினுர். பள்ளித் தலைமையாசிரியர் எசு. வேலப்பன் அவர்கள் கூட்டத்தினரை வரவேற்றுக் கூட்டம் சிறப்புற நடைபெற உதவியது பாராட்டத் தக்கது. இறுதியில் தமிழாசிரியர் திரு. டி. எசு. வேங்கட இராமன் நன்றி கூறினுர்.

## 6. கோவை, சூலூர், அ. உ, பள்ளி-திருவள்ளுவர் திருநாள்.

நிகழும் தி. பி. 2006, சுறவம் 7-ஆம் பக்கல் (20-1-75) அன்று பிற்பகல், கோவை, சூலூர் அரசினர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் திருவள்ளுவர் திருநாள் கொண்டாடப் பெற்றது. விழாவிற்கு திரு. டி. ஆர். திருவேங்கடசாமி, க.இ; ஆ.ப., அவர்கள் தலைமை தாங்கினார்கள். வரவேற்புரை திரு. ஆ.ப. சுப்பிரமணியம், க.இ;ஆ.ப., அவர்களால் நிகழ்த்தப் பெற்றது. பாவலர் பெருஞ்சித்திரனார் அவர்கள், 'திருக்குறள் இன்றைக்கும் பொருந்தும் நூலா?' என்னுந் தலைப்பில் சிறந்ததொரு சொற்பொழிவாற்றினார். இறுதியில் புலவர். திரு. சண்முகம் அவர்கள் நன்றியுரை பகர்ந்தார். கூட்டம் மாலை 6-மணியளவில் சிறப்புற முடிவுற்றது.

## 7. பொள்ளாச்சி, ந. மு. மகாலிங்கம் கலைக்கல்லூரிக் கூட்டம்.

கடந்த 21-1-75 அன்று மாலை, கோவை, பொள்ளாச்சி, ந.மு.க. மகாலிங்கம் கலைக்கல்லூரியில், தமிழ் மன்றக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்குக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. அமுதன், க.மு. அவர்கள் தலைமை தாங்கினார். சிறப்புச் சொற்பொழிவைப் பாவலர் பெருஞ்சித்திரனார் அவர்கள், 'மொழிப்பயன்' என்னுந் தலைப்பில் நிகழ்த்தினார். மாணவர்கள் சிறிய அளவில் வந்திருந்தனரேனும், இறுதிவரை மிக்க ஆர்வத்துடன் கேட்டனர்.

கோவை மாவட்டக் கூட்டங்களைத் தென்மொழியன்பர் பல்லடம் திரு. முத்துக்குமரன், க.இ. அவர்கள் ஏற்பாடு செய்ததும், அவர்களும், கோவை நித்தலின்பனாரும் அவிநாசி துரையரசன் அவர்களும், பெரும்பாலான கூட்டங்களில் ஆசிரியருடன் கலந்து கொண்டதும் குறிப்பிடத் தக்கது.

---

# நீத்தார் நினைவுக் கொடை.

தகடூர் மாவட்டம், செட்டிஅள்ளி, அகரம், திரு. க. கோவிந்தன் அவர்கள், கடந்த 18—9—75 அன்று இயற்கை எய்திய தம் அன்னையார் நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்கு உருபா: 25/— நன்கொடையளித்துள்ளார்கள். மனம் கவன்ற நிலையிலும் தமிழ் நினைந்து மனந்தேறும் அவர்தம் மாண்புள்ளத்திற்கு அமைதி வேண்டியும், அவர்தம் அன்னையாரை நினைவு கூர்ந்தும் தென்மொழி இரங்கல் தெரிவித்துக் கொள்கின்றது. —அமைச்சர்.

---

## பொங்கல் வாழ்த்துக்கு நன்றி!

எனக்கு அன்புடன் பொங்கல் வாழ்த்து அனுப்பியபேராசிரியர்கள், தமிழன்பர்கள் யாவருக்கும் என் அன்பு கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். —பெருஞ்சித்திரன்.

உள்ளங்களைக் சிறுகச் சிறுகச் கொல்லுதல் வேண்டா! இந்தி மாநாட்டுச் செய்தி கண்டிருப்பீர்கள். அனைத்துலக அவையின் மொழிகளில் அஃது இடம் பெறத் துடிக்கின்றது. மொரிசியசு தலைமை அமைச்சர் உலக மொழிகளில் நான்காம் இடம் பெறுகின்றது இந்தி என்கின்றார், நமக்கு இங்கு வயிறு பற்றி எரிகின்றது. தமிழக மக்களைக் குறிப்பாகத் தென்மொழி அன்பர்களை நான் ஒன்று கேட்பேன். இனியும் காத்திருக்க வேண்டா. உண்பதும் உடுப்பதும் நம் தொழில் அன்று; திட்டமிடுங்கள்! செயல்படுங்கள்! தமிழக விடுதலைக்கு இன்றே புறப்படுங்கள்!

—வி. சோசப்பு பிரான்சிசு, அறி.இ., மதுரை-16.

**0: 431 :** ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த அட்டூழியங்களை அஞ்சாது எடுத்துரைக்கும் அண்ணலே! வணக்கம். நான் பணியாற்றிவரும் இவ்வூரில் அண்மையில் மாரியம்மன் கோயிலில் ஓர் ஆரியப் பார்ப்பனனின் உரையொன்று நிகழ்ந்தது. அவன் இக்கால் மழை பெய்யாமைக்கு முகாமையான கரணியங்கள் மூன்று என்றும், ஒன்று அவர்கள் (ஆரியர்கள்) வேதம் ஓதாமை என்றும், இரண்டு இன்று ஆளுகின்ற அரசு நன்னிலையில் இயங்காமையென்றும், மூன்று நாட்டில் கற்புள்ள பெண்கள் இல்லாமை என்றும் கூறியதோடு, ஆரியர்கள் வேதம் ஓதாமைக்கு அவர்கள் கரணியமில்லை என்றும், அவர்களை ஓம்பும் அறவோர் நாட்டில் அருகி விட்டமையே என்றும் கூறி, அவர்களை ஓம்பும் மனப்பான்மை மக்களுக்கு ஏற்படுமானால் அவர்கள் வேதமோதி நாட்டில் தவறாது மழை பெய்விக்க இயலுமெனவும் பலவாறு கதைத்தான். மேலும் அவ்வுரையைக் கீழ் நிலையிலுள்ள ஏழைப் பெண்களேயன்றி, இவ்வூர்ப் பெருநிலக்கிழாரின் மனைவிமார்கள் உட்பட, ஏறக்குறைய நூறு பெண்கள் தங்கள் கணவன்மார்களுடன் சேர்ந்து வந்து கேட்டுக் கொண்டிருந்த போதும், ஓர் ஆரியப்பார்ப்பனனுக்கு என்ன நெஞ்சழுத்தம் இருந்திருந்தால் கற்புள்ள பெண்கள் இல்லையென்று கூறியிருப்பான்? அதையும் மகிழ்வோடு கேட்டுக் கொண்டிருந்து விட்டு இறுதியில் அப் பார்ப்பனனின் காலில் விழுந்து வணங்கிச் சென்ற நம்மின மக்களின் அறிவை என்னென்பது? தங்களுடைய கற்பிற்கே களங்கம் கூறிய ஒரு கயவனின் காலில் விழுந்து வணங்கும் மடமையைக் கண்டு மனமிரங்குவதா? மானங்கெட்ட சூடு சொரணையற்ற அவர்களது நிலையைக் கண்டு வருந்துவதா என்றே விளங்கவில்லை.

மேலும் 'நாத்திக'த்திற்கும், 'ஆத்திக'த்திற்கும் அவன் விளக்கம் கொடுக்கும் போது, கடவுள் இல்லையென்போரெல்லாம் 'நாத்திக'ரல்ல ரென்றும், வேதம் இல்லையென்பவனே 'நாத்திக' னென்றும் கூறி அகமகிழ்ந்தான். அவனது உரையால் வேதம் உண்டு (மெய்) என்போரெல்லாம் ஆரியர்கள் பூதேவர்கள் என்பதையும், அவர்கள் படைப்புக்கடவுளின் முகத்திலே தோன்றியோ ரென்பதையும், சூத்திரர்கள் அக்கடவுளின் பாதத்திலே தோன்றியோ ரென்பதையும் நம்பச் செய்து, நம்மின மக்களின் மடமையை வளர்த்து விடும் ஆரியக் குறும்பு இன்னும் அடங்கியபாடில்லை என்பது தெள்ளென விளங்குகிறது. அறிவியல் மிக வளர்ச்சியுற்ற இந்தக் காலத்திலும் ஆரியக் குறும்புகள் அடங்கவில்லையென்றால் அக்கால், மக்கள் அறிவியல் அறிவு சிறிதுமின்றி வாழ்ந்தபோழ்து

—(அடுத்த பக்கம் பார்க்க).

இவ்வாரியக் கும்பல் எந்நிலையில் செயல்பட்டிருக்கும் என்பதை எண்ணுந்தோறும் நெஞ்சம் புண்ணுகின்றது. அந்தோ தமிழினமே! என்று நீ அறிவு பெற்று ஆரியக் குறும்பை அடக்குவையோ?

—அ. தங்கவேலன், வாணுபுரம்.

**0: 432:** தமிழ்ச்சிட்டில் வந்த "தன்னலமும் பொது நலமும்" என்னும் உரையில், உலக உயிர்களின் ஒற்றுமையைப் பற்றி இயற்கைத் தன்மையின் அடிப்படையை வைத்தே உணர்த்தி விட்டீர்கள். அறிவியல் அறிஞர்கள் தங்களின் இந்த உரையினைப் படித்துப் பார்த்தால், அணு அமைப்பிற்கும் கோள்களின் ஈர்ப்பிற்கும் புதிய விளக்கங்கள், அல்லது புதிய உண்மைகளைக் கண்டு பிடிக்கவும் செய்யலாம். தங்களின் இந்த நுணுக்கமான அறிவைக் கண்டு வியக்கிறேன். —செ. வ. புகழேந்தி, கள்ளக்குறிச்சி.

**0 : 433 :** தங்களின் உரைநடை படிக்கும் போது ..................ரின் உரைநடையைக் காட்டிலும் மிக்க இனிமையாகவும், பெரிதும் மகிழ்வு ஊட்டுவதாகவும் உள்ளது. எல்லாரையும் வாழ வைத்த சென்னை—வாழ வைக்கும் சென்னை—வாழ வைத்துக் கொண்டிருக்கும் சென்னை இப்பொழுது தங்கள் (நம்) தென்மொழியையும் வாழ வைக்கட்டும்! தென்மொழி வளர்ச்சிக்கு என் அன்பு வாழ்த்து! தங்களின் சிங்கைச் செலவு படிக்கும் போது தங்களுடன் இருப்பது போலவே தோன்றுகிறது! நானும் என் நண்பர்களும் தென்மொழியின் நரம்புகளாக இருந்து செயல்படுவோம்.

—ஒரு தென்மொழியன்பன், சென்னை-33.

**0: 434:** ஐயாவுக்கு, 'எல்லா வகைத் தீய விளைவுகளுக்கும் அடிப்படையான செய்தித் துறையையும் பொழுது போக்குத் துறையையும் கட்டுப் படுத்துக' எனும் தலைப்பில் அமைந்த ஆசிரியவுரை மிகச் சிறப்பு. ஒவ்வொரு பள்ளி, கல்லூரி மாணுக்கர்க்கும் திரையரங்கம் சென்று வருவோர்க்கும் கையில் கொடுத்தல் வேண்டும். எழுத்திற்கு எழுத்துச் சுவைத்தேன்; சுவைத்தோம். பேரா. க. ப. அறவாணன், பச்சையப்பன் கல்லூரி, சென்னை-30.—பேரா. தாயம்மாள், அறவாணன். பச்சையப்பன் மகளிர் கல்லூரி, சென்னை-32.

**0: 435:** "தென்மொழி" பதினைந்து ஆண்டுக் காலத்திற்கும் மேலாகத் தமிழ் இனத்திற்காகப் பாடுபட்டும், தேவையான அளவிற்கு அது தமிழரின் கவனத்தை ஈர்க்கவில்லை. ஓரளவு வளர்ந்திருக்கலாம். அந்த வளர்ச்சியும் தாங்கள் இரவு பகல் கண் விழித்துக் கருத்தோடுழைத்து—வளர்த்தது. இந்த வளர்ச்சி வேகம் குமுகாய மாற்றத்திற்குப் போதாது. ஓடிக் கொண்டிருக்கின்ற ஒருவனை நடந்து சென்று எப்பொழுது பிடித்து-நற்பாதை காட்டுவது? —தென்மொழி ஓர் இதழன்று; ஓர் இயக்கம் என்று தாங்கள் கூறினீர்கள். இயக்கம் கருத்தாழமும் செயற்பாடும் ஒன்றுக் கொன்று குறையாதிருந்தால் அன்றோ வளரும். தென்மொழிக்குக் கருத்தாழம் மிகுதி-செயற்பாடு போதாது. அதனுல்தான் அது தேவையான அளவு வளர வில்லை.

—கு. அய்யாவு. பழையசூரி பாளையம்.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005, தமிழகம்.